REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

THINAKARAN தினகரன்

2022 மே 17 செவ்வாய்க்கிழமை

1932 - 2022

வரு. 90 இல. 114 | Tuesday 17, May, 2022 | 12பக்கங்கள் | 40/-




## நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலையில்!

# உயிரை பணயம் வைத்து அனைத்து சவால்களுக்கும் முகங்கொடுப்பேன்

## "உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பை எனக்கு தாருங்கள்"

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டு மக்களுக்கான விசேட உரையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க வேண்டுகோள்

- ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே பிரதமர் பொறுப்பை ஏற்றேன்
- உண்மையான நிலையை மறைத்து மக்களுக்கு பொய்யுரைக்க விரும்பவில்லை
- ஒரு நாளைக்கு போதுமான பெற்றோல் மட்டுமே கையிருப்பில்
- எவர் விரும்பாவிடினும் பணத்தை அச்சிடும் தேவை எமக்குள்ளது
- எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு
- நட்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை தனியார்மயப்படுத்த வேண்டும்



பிரதமரின் முழுமையான உரை 6ஆம் பக்கத்தில்...



இலங்கைக்கு அனுப்புவதற்காக அண்ணாநகர் மருந்துசாலையில் பொதி செய்து வைக்கப்பட்டுள்ள மருந்து பொருட்களை தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டபோது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

## O/L பரீட்சைக்காக பாடசாலைகளுக்கு



# மே 20 இல் விடுமுறை ஜூன் 02 இல் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்காக எதிர்வரும் 20ஆம் திகதி முதல் சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படுகின்ற நிலையில் ஜூன் மாதம் 2ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை திட்டமிட்டவாறு எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக ஏற்பாடுகள்

08

## எதிர்வரும் மூன்று நாட்களுக்கு மட்டும்

# எரிபொருள் பெறுவதற்காக வரிசையில் நிற்க வேண்டாம்

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன மக்களிடம் கோரல்

லோரன்ஸ் செல்வநாயகம்



எரிபொருளுடன் மேலும் 3 கப்பல்கள் விரைவில் நாட்டுக்கு வரவுள்ளதாக தெரிவித்துள்ள மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இன்னும் மூன்று தினங்களுக்கு பொதுமக்கள் எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேவையான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் எரிபொருள்

08

## அமைச்சர் பதவிகள் தேவையில்லை;

# அரசிற்கு SJBயும் ஆதரவளிக்க முடிவு

## பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார



லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கட்சி அரசாங்கத்திற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும்

08

## மக்கள் பிரச்சினைகளை தீர்க்கும் குழுக்களில் பங்கேற்பு;

# அமைச்சரவையில் இடம்பெறாது புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு

## SLPPயிலிருந்து வெளியேறிய 10 கட்சிகள் தீர்மானம்



லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் கட்சிகள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளன.

புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்கப்போவதில்லை என தெரிவித்துள்ள அந்த 10 கட்சிகள், அனைத்து கட்சித் தலைவர்களின் சிறந்த யோசனைகளுடனான தேசிய சபை மற்றும் உருவாக்கப்படவுள்ள

08

## டொலர் செலுத்தப்பட்டுள்ளது;

# Gas விநியோகம் விரைவுபடுத்தப்படும்

## பிரதமர் நம்பிக்கை தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கைக்கு ஒரு தொகை எரிவாயுவை கொண்டு வர தேவையான டொலரை அரசாங்கம் வழங்கியுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எரிவாயுவை இறக்கப்பட்ட பின்னர்

08

# நடமாடும் பொலிஸ் ரோந்துப் பணிகள்

## அதிகரிக்குமாறு IGP கோரிக்கை



நடமாடும் பொலிஸ் ரோந்துப் பணியை அதிகரிக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும்

08

# பிரதமர் நியமித்த 4 விசேட குழுக்களின் அறிக்கை தயார்



அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், உரங்கள் மற்றும் பெற்றோலிய வளம் தொடர்பான நெருக்கடிகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசேட குழுக்களின் அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

08

## தென்பகுதி போன்று

# தமிழருக்கும் நிவாரணம் வழங்கக் கோருகிறார் சுரேஷ்



அண்மையில் காலிமுகத்திடலில் அமைதி வழியில் போராடிக் கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர் கூட்டத்திற்கு எதிராக போராட்டக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதல் தொடர்பான மதிப்பீடுகளையும் நிவாரணங்களையும் வழங்க அரசாங்கம் உடனடியாக அறிவித்துள்ள நிலையில், இதுகாலம்

08

# முக்கிய பிரமுகர்களது வீடுகளுக்கு தீயிட்ட 398 பேர் இதுவரை கைது

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ



காலி முகத்திடல், கொள்ளுப்பிட்டிய மற்றும் நாடளாவிய ரீதியில் நபர்களைத் தாக்கி பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இதுவரை 398 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (15) கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

08

# பாராளுமன்ற ஆசன ஒதுக்கீட்டில் மாற்றம்

## பிரதமருக்கு ஆளும் தரப்பில் ஆசனம்



பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் இன்று காலை 10.00 மணிக்கு கூடுகிறது. நாட்டில் ஏற்பட்ட வன்முறை மற்றும் அரசியல்

08

# திறந்த சந்தைகளில் டொலர் கொள்வனவு

## அமைச்சரவை அனுமதி வழங்கியது



எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான கட்டணத்தை செலுத்துவதற்காக திறந்த சந்தைகளில் அமெரிக்க டொலரை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

08

# எனக்கு எதற்கு பாதுகாப்பு?

## இராணுவத்தை திருப்பி அனுப்பிவைத்த மனோ



தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்றஉறுப்பினர்மனோ கணேசனின் வீட்டிற்குச் சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அவர்

08

# தங்கத்தின் விலையில் ஓரளவு வீழ்ச்சி

## மேலும் குறைவடையும் வாய்ப்பு



அமெரிக்க டொலரின் மதிப்பு இரண்டு தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ள நிலையில் தங்கத்தின் விலை குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1,810 அமெரிக்க டொலர்களாக நேற்றைய தினம் பதிவாகியுள்ளது.

08

# எரிபொருள் இல்லை எனில் பஸ் சேவை முற்றாக ஸ்தம்பிதம்



டீசல் பற்றாக்குறையால் நாடளாவிய ரீதியில் பஸ் சேவைகளை 10 வீதத்தால் குறைக்க வேண்டியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் எரிபொருள் இல்லாத

08

## சஜித் தரப்பிலிருந்து

# இருவர் பிரதமரின் அமைச்சரவையில்?



ஐக்கிய மக்கள் சக்தியின் இரு முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானத்திலிருந்து விலகி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார யுத்த அமைச்சரவையில் இணைய தீர்மானித்துள்ளனர் என கட்சித் தகவல்கள் தெரிவித்தன என

08

# மஹிந்த வீட்டு நாய் பிரதேச சபையின் உறுப்பினர் வீட்டில்

கடந்த 9ஆம் திகதி உட்பட நாடு முழுவதும் நிலவிய அமைதியின்மைக்கு மத்தியில் ராஜபக்ஷவின் மெதமுலன வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டவேளை அங்கிருந்த நாய்க்குட்டிகள் காணாமல் போயிருந்தன.

காணாமல் போன நாய்க்குட்டிகளில் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த வீரகெட்டிய பிரதேச சபை உறுப்பினரின் மகளிடத்தில் காணப்பட்டபோது அதனை பொலிஸார் கண்டுபிடித்தோடு குறித்த பிரதேச சபை

08

## விக்கல் வீராச்சாமி



இறந்தவங்கள நினைவு கூரலாம், ஆனா அந்த ஆத்மாக்கள வைச்சு அரசியல் நடத்த கூடாது எண்டு ரணில் ஐயா கூறியிருக்கிறாரே...

அவர் தெளிவாத்தான் கூறியிருக்கிறார், எங்கட தமிழ் அரசியல்வாதிகள் அத எப்படி மொழிபெயர்த்து கையாள போகினமோ தெரியல...!!!

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

## வடகொரியாவில் கொவிட் சம்பவங்கள் ஒரு மில்லியனை தாண்டியதாக அச்சம்



வட கொரியாவில் கொவிட் தொற்று தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் அந்நாட்டு தலைவர் கிம் ஜொங் உன் சுகாதார அதிகாரிகளை சாடியிருப்பதோடு மருந்து விநியோகத்திற்கு உதவ இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

ஒரு மில்லியனுக்கு அதிகமானவர்கள் சுகவீனம் உற்றிருப்பதோடு இதனை வட கொரிய அரச ஊடகம் 'காய்ச்சல்' என்றே கூறி வருகிறது.

சுமார் 50 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும் இதில் எத்தனை பேரிடம் கொவிட் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்படவில்லை.

வட கொரியாவில் வைரஸ் சோதனை திறன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருப்பதோடு, ஒரு சில சம்பவங்களே உறுதி செய்யப்பட்டுள்ளன.

பொதிய அளவு தடுப்பு மருந்து போடாதது மற்றும் மோசமான சுகாதாரக் கட்டமைப்பு காரணமாக கொரோனா தொற்று வட கொரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் அந்த நாட்டில் ஏற்கனவே முடக்க நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.


வட கொரியாவுக்கு கடந்த ஆண்டில் மில்லியன் கணக்கான தடுப்பு மருந்துகளை வழங்க சர்வதேச சமூகம் முன்வந்தபோதும் தாம் கொவிட் தொற்றை கட்டுப்படுத்தி இருப்பதாக அந்த உதவிகளை மறுத்தது. அந்த நாடு கொவிட் தொற்று ஆரம்பித்த 2020 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே எல்லைகளை மூடியமை குறிப்பிடத்தக்கது.

வட கொரியா தனது எல்லைகளை பகிர்ந்துகொள்ளும் தென் கொரியா மற்றும் சீனாவிலும் நோய் தொற்று அதிகரித்துள்ளது. சீனா ஒமிக்ரோன் திரிபின் காரணமாக மிகப் பெரிய நகரங்களில் பொது முடக்கத்தை அமுல்படுத்தியுள்ளது.

கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் வட கொரியாவுக்கு தடுப்பூசி, சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்க தயாராக இருப்பதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

வேகமாக பரவி வரும் கொவிட் 19 தொற்று ஒரு "பேரழிவு" என்று கிம் ஜொங் உன் கடந்த சனிக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

## அமெரிக்காவில் மற்றுமொரு துப்பாக்கிச்சூடு: இருவர் பலி




அமெரிக்காவின் டெக்சஸ் மாநிலத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் தொடர்ந்து இடம்பெறும் மூன்றாவது துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக இது உள்ளது.

கடந்த சனிக்கிழமைநியூயோர்க்கில் கடைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டதோடு, கடந்த ஞாயிறன்று கலிபோர்னியாவிலுள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்.

இரு குழுவினருக்கிடையே சண்டை மூண்டபோது, துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. சம்பவத்தில் காயமுற்ற மூவர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். துப்பாக்கிச் சூடு நடந்தபோது மலிவு விற்பனைச் சந்தையில் ஆயிரக்கணக்கானோர் இருந்ததாக நம்பப்படுகிறது.

## சுவீடன், பின்லாந்து நேட்டோ அமைப்பில் இணைவது உறுதி



நேட்டோ அமைப்பின் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிப்பதாக சுவீடன் மற்றும் பின்லாந்து உறுதி செய்துள்ளன. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்திருக்கும் நிலையிலேயே இந்த வரலாற்று நகர்வு இடம்பெற்றுள்ளது.

இந்த மேற்கத்திய பாதுகாப்பு கூட்டமைப்பில் இணைவதற்கு ஆதரவாக தமது நாடு விண்ணப்பிக்கும் என்று சுவீடனின் சமூக ஜனநாயக அரசு கூறியுள்ளது. இந்த கூட்டமைப்பில் இணையவிருப்பதாக பின்லாந்து உத்தியோகபூர்வமாக அறிவித்த நிலையிலேயே சுவீடனின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நேட்டோவை பாதுகாப்பு அச்சுறுத்தலாக பார்க்கும் ரஷ்யா, இதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தென்கிழக்கு ஆசிய நாடுகளில் போதை வர்த்தகம்; சீன கிரிமினல் கும்பல்கள் மீது குற்றச்சாட்டு



சீன கிரிமினல் கும்பல்களினால் வழிநடத்தப்படும் குற்றச்செயல் நிலையங்கள் தென்கிழக்காசிய நாடுகளின் காடுசார்ந்த எல்லைப்புறங்களில் இயங்கி வருவதாகவும் இந்நிலையங்களில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட தாய்லாந்து கிராமவாசிகள் பணியாற்றி வருவதாகவும் தாய்லாந்து தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

2021ம்ஆண்டு முதல் கம்போடிய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 800 தாய்வாசிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கம்போடிய தலைநகரான போ நொம்பென்னில் நடைபெற்ற சுற்றிவளைப்பில் 99 தாய்லாந்துவாசிகள் கடந்த நவம்பரில் மீட்கப்பட்டனர்.

கம்போடியாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான மேற்கு கம்போடிய சியானுக்வில் நகரம், போனொம்பென், வியாட்நாமை ஒட்டிய குரொம்பாவெட் ஆகிய இடங்களில் சீன முகவர்களால் நடத்தப்படும் சட்டவிரோத கிரிமினல் நிலையங்கள் இயங்குவதாக புலனாய்வுத்தகவல்கள் மூலமாக தெரியவந்துள்ளது.

இத் தென்கிழக்காசிய நாடுகளில் கொவிட் அடைப்புக்களினால் பெருமளவிலானொர் தொழில் இழந்து வறுமையில் வாடுவதாகவும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் இக்கிரிமினல் கும்பல்கள் வாழ வழியின்றித் தவிப்போருக்கு ஆசைவார்த்தைக் காட்டியும் அவசியமானால் ஆள் கடத்தல் மேற்கொண்டும் தமது நிலையங்களுககு அழைத்து வருவதாகவும் தெரிகிறது. இச்சீனக் குழுக்களின் தலைவர்கள் இவர்களை தொலைபேசி வாயிலாக பேசி தமக்கு தேவையான காரியங்களை செய்விப்பதாகவும் இத்தகவல்கள் கூறுகின்றன.

கிழக்கு மியன்மாரில் நடைபெறும் பாரிய போதைப் பொருள் கடத்தல் வலயத்தில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும், ஏனைய குற்றச்செயல்களில் ஈடுபடும்படி கேட்கப்படுவதாகவும் தவறும பட்சத்தில் கடுமையாகத் தண்டிக்கப்படுவதாகவும் இத்தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

## தைவானை சீனா இராணுவ ரீதியாக கைப்பற்றும் வாய்ப்புகள் உள்ளன

### மேற்கத்திய அவதானிகள் எச்சரிக்கை



ரஷ்ய, உக்ரைன் யுத்தத்தின் சாதக, பாதக பலன்களை சீனா வெகு உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தாய்வானை கபளீகரம் செய்யும் வகையில் ஒரு படையெடுப்பை மேற்கொண்டால் மேற்கத்திய மற்றும் தாய்வான் ஆதரவு நாடுகள் அதை எவ்வாறு எடுத்துக் கொள்ளும் என்பதையும் மதிப்பிட்டு வருவதாகவும் மேற்கித்திய அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவை விட பலம் குன்றிய நாடான உக்ரைனால் ரஷ்ய படைகளுக்கு பலத்த சேதத்தை விளைவிக்க முடிந்திருப்பதோடு இரண்டு மாதங்களாக தாக்குப்பிடிக்கவும் முடிந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டும் அவர்கள், உக்ரைனின் எல்லை நாடுகள் நேட்டோ உறுப்பு நாடுகளாகத் திகழ்வதால் மேற்கு நாடுகளினால் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை செய்யவும் முடிந்தது. என்பதையும் குறிப்பிடுகின்றார்.

இதே சமயம் சீனாவுக்கு அருகில் குட்டித்தீவாக விளங்கும் தாய்வான் மீது மின்னல் வேகத் தாக்குதல் நடத்தி அதை குறுகிய காலத்தில் தன்வசப்படுத்திக்கொள்ளலாம் என சீன இராணுவம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிடம் யோசனை முன்வைத்திருப்பதோடு ஒரு தீவாகத் திகழும் தைவானுக்கு அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளினால் கடல் வழியாக மட்டுமே ஆயுத விநியோகங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் கடல் முற்றுகையை சீனக் கடற்படை மேற்கொள்வதன் மூலம் தைவானுக்கான ஆயுத விநியோகத்தைத் தடுத்துவிடலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தாய்வான் சீனாவின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி என்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையில் எந்த மாற்றமும் கிடையாது. ஆப்கானிஸ்தான் மற்றும் உக்ரைன் அனுபவங்கள் தைவான் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொளவதற்கான வாய்ப்புகளை அதிகரித்திருப்பதாகவே சீனா நம்புவதாக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

## சோமாலிய ஜனாதிபதி 327 வாக்குகளால் தேர்வு



சோமாலியாவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் திறக்கப்பட்டிருந்த வாக்கெடுப்பின் மூலம் அந்நாட்டின் முன்னாள் தலைவர் ஹசன் ஷெய்க் மஹ்மூத் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு முதல் பதவியில் இருக்கும் தற்போதைய ஜனாதிபதி முஹமது அபூதல்லாஹி பர்மாஜோவை அவர் தோற்கடித்தார்.

பரந்த அளவிலான தேர்தல் ஒன்றை நடத்துவதில் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதால் சோமாலியாவின் 328 எம்.பிக்கள் மாத்திரமே இந்தத் தேர்தலில் பங்கேற்றதோடு அதிலும் ஒருவர் தமது வாக்கை அளிக்கவில்லை.

இதன்படி மஹ்மூத் 214 வாக்குகளை வென்றதோடு பர்மாஜோ 110 வாக்குகளை பெற்றார்.

## உலகக் கோதுமை விலை அதிகரிப்பு



இந்தியா கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்ததை அடுத்து சர்வதேச சந்தையில் கோதுமை விலை அதிகரித்துள்ளது.

சிக்காகோவில் உள்ள முக்கிய கோதுமை குறியீடு 5.9 வீதமாக உயர்ந்திருப்பதோடு இது கடந்த இரண்டு மாதங்களில் உச்ச அளவாக பதிவானது.

இந்தியாவில் வெப்ப அலை காரணமாக கோதுமை பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டு உள்நாட்டு விலை சாதனை அளவுக்கு உச்சம் தொட்டதை அடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உலக பொருட்கள் சந்தையில் கோதுமை விலை உயர்ந்ததால் அண்மைய மாதங்களில் ரொட்டி, கேக்குகள் தொடக்கம் நூடுல்ஸ் வரை அனைத்தினதும் விலை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் தற்கொலை தாக்குதலில் அறுவர் பலி



ஆப்கானிஸ்தானுடனான எல்லைக்கு அருகில் வடமேற்கு பாகிஸ்தானில் இராணுவ வாகனம் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதல் ஒன்றில் மூன்று சிறுவர்கள் மற்றும் மூன்று படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு வசிரிஸ்தானின் பழங்குடி மாவட்டத்தில் உள்ள மிர் அலி சிறு நகரித்துக்கு அருகில் இருக்கும் கிராமம் ஒன்றில் பாதுகாப்பு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வாகனத்திற்கு அருகில் குண்டுதாரி தற்கொலை அங்கியை வெடிக்கச் செய்ததாக பாகிஸ்தான் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தரப்பு பொறுப்பேற்கவில்லை.

## மாலிஸ் பழங்குடியின பெண் குழந்தைகளுக்கு 5 வயதில் திருமணம்

ஆந்திரா மற்றும் ஒடிசாவின் எல்லைப் பகுதியில் வசிக்கும் மாலி ஸ் எனும் பழங்குடியினரிடையே ஒரு விநோதமான திருமண மரபு உள்ளது.

இந் த இனத்தில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் 3 முறை திருமணம் செய்துகொள்வார்கள். அவர்களுக்கு ஐந்து வயது ஆவதற்கு முன்பு ஒருமுறையும் பருவம் அடைந்தவுடன் ஒரு முறையும் திருமணம் நடக்கும்.

ஆனால், இந்த இரண்டு திருமணங்களும் மணமகன் இல்லாமல் நடக்கும். இருப்பினும் அவற்றை மாலிஸ் பழங்குடிகள் அவற்றை திருமணங்கள் என்று கூறியே நடத்துகின்றனர்.

மூன்றாவது முறை நடக்கும் திருமணத்தில் தான் மாப்பிள்ளை இருப்பார். இந்தத் திருமணத்திற்குப் பிறகு மணப்பெண் மாமியார் வீட்டுக்கு அனுப்பப்படுவார். தொடிபுட்டு என்ற இந்த கிராமத்தில் 5 வயதுக்கு உட்பட்ட 50 சிறுமிகள் ஒரே நேரத்தில் முதல் திருமணத்தைச் செய்துகொண்டனர்.

உறவினர்கள், விருந்துகள், திருமண விழாக்கள் என கிராமம் முழுவதும் பண்டிகை சூழல் இருக்கும். இதுபோன்ற ஒவ்வொரு திருமணத்திற்கும் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய் செலவாகும் என்று இதுவரை இதுபோன்ற 20 திருமணங்களைப் பார்த்துள்ள பார்வதி கூறினார்.

## ஈரானில் மக்கள் கிளர்ச்சி

இலங்கையைப் போல ஈரானிலும் விலைவாசி உயர்வுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி வெடித்துள்ளது. இந்த போராட்டம் ஈரான் அரசியலிலும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது. ஈரானின் மத தலைவர் கொமேனிக்கு எதிரான கிளர்ச்சியாகவும் இது உருவெடுத்துள்ளது.

ஈரானில் கடந்த சில நாட்களாக மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதிகரித்து வரும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த கோரி இந்த கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. சமூக வலைதளங்களில் ஈரானின் அத்தனை நகரங்களிலும் மக்கள் புரட்சி வெடித்திருப்பதாக வீடியோக்கள் பதிவிடப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த வீடியோக்களின் உண்மை தன்மை என்ன என்பது தெரியவில்லை.

இருந்தபோதும் ஈரானில் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பது அங்கு அரசியலிலும் எதிரொலித்து வருகிறது. இத்தனை ஆண்டுகாலம் தங்களது போற்றுதலுக்குரிய மத தலைவராக மதிக்கப்பட்ட கொமேனியின் படங்களையும் தீயிட்டு கிளர்ச்சியாளர்கள் எரித்தனர். மேலும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டு மறைந்த மன்னர் ரேஷா பகலவிக்கு ஆதரவான முழக்கங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. இதனால் ஈரானில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களுக்கு SLFP ஆதரவு

## சு.கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கப்போவதாக அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது கட்சி புதிய அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளை பொறுப்பேற்காது என ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்து வந்த நிலையில் அது தொடர்பில் மேலும் ஒரு பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 10 கட்சிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில்,

அந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, முன்னாள் பிரதி சபாநாயகர்

08



ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹ்யானின் மறைவுக்காக திறந்து வைக்கப்பட்ட இரங்கல் புத்தகத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கொழும்பில் உள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவரின் இல்லத்தில் வைத்து கையொப்பமிட்டார்.
ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹ்யானின் மறைவுக்காக, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் ஆழ்ந்த அனுதாபங்களை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

# போராட்டக்காரர்களுடன் பேசத் தயார்: பிரதமர் அறிவிப்பு

ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக முன்னாள் அமைச்சர் ருவன் விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆர்ப்பாட்டத்திலுள்ள இளைஞர்கள் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாட தான் தயாராகவுள்ளதாகவும் அவர்களை அரசாங்கம் மற்றும் பாராளுமன்ற செயற்பாடுகளில் இணைத்துக் கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

டீசல் தட்டுப்பாடு;

# 80 வீதமான தனியார் பஸ்கள் சேவையிலிருந்து நீக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

டீசல் தட்டுப்பாடு காரணமாக 80 வீதமான தனியார் போக்குவரத்து பஸ்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தனியார் பஸ் சங்கங்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், அண்மைக்காலமாக 20 வீத பஸ் வண்டிகளே சேவையிலீடுபடுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டோ டீசல் தட்டுப்பாடு காரணமாக அண்மைக்காலமாக சுப்பர் டீசல் மூலமே பஸ் சேவைகளை முன்னெடுத்துச் சென்றதாகவும் தொடர்ந்தும் அவ்வாறு செயற்பட முடியாது என தெரிவித்துள்ள அவர், தற்போதைக்கு 20 வீதமான பஸ்களே சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டீசல் தட்டுப்பாட்டுக்கு நிவர்த்தி காணும் வரை இந்த நிலையே தொடருமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றம் இன்று கூடுகிறது பிரதி சபாநாயகர் தெரிவும் இடம்பெறும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பாராளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது.

அதேவேளை இன்று காலை 8.30 மணிக்கு பாராளுமன்ற கட்டிடத்தில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்தது.

இந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது பிரதி சபாநாயகர் தெரிவு மற்றும் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவி ஏற்றுள்ள நிலையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி சபாநாயகர் பதவிக்காக பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு கட்சிகளிலும் இருவர் போட்டியிடவுள்ளதுடன் அதற்கான வாக்களிப்பும் நடைபெறவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்சவும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்னவும் பிரதி சபாநாயகர் பதவிக்காக போட்டியிடவுள்ளனர்.

தாக்குதலுடன் தொடர்புள்ளோரை

# அடையாளங்காட்டுமாறு பொலிஸார் கோரிக்கை

கடந்த 9ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடல் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை அடையாளம் காண்பதற்காக பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

அதற்கமைய, அவர்களின் புகைப்படங்களை பொலிஸார் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளனர். இது தொடர்பான தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு(CID) அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பான விபரங்களை 071 859 4901 / 071 859 4915 / 071 859 2087 மற்றும் 011 242 2176 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இதே வேளை எம்.பிகளின் வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்திய பலர் கடந்த தினங்களில் கைதாகியிருந்தனர்.

# சீன தம்பதிகள் பயணம் செய்த கார் கோர விபத்து

## ஒருவர் உயிரிழப்பு; பெண் காயம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



பாலாவி கற்பிட்டி பிரதான வீதியின் குறிஞ்சிப்பிட்டி பகுதியில் நேற்று (16) இடம்பெற்ற வீதி விபத்தில் சீன நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். இலங்கையில் தங்கியிருந்த சீனாவைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து வியாபார நோக்கத்திற்காக புத்தளம் கற்பிட்டி பகுதிக்கு வருகை தந்த சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட இருவர் பயணம் செய்த சொகுசு கார் விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

08



ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைவர் சேக் கலீபா பின் ஸாஇத் அல் நயாயானின் மறைவையொட்டி அனுதாபம் தெரிவிப்பதற்காக தூதுவரின் இல்லத்திற்குச் சென்ற இலங்கை மஹபோதி சங்க தலைவர் பானகல உபதிஸ்ஸ தேரர் மற்றும் உலமா சபை பொதுச்செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூர் ஆமீத் மற்றும் உதவி பொதுச் செயலாளர் மௌலவி எம்.எஸ்.எம்.தாஸிம் ஆகியோர் தூதுவருடன் உரையாடுவதை காணலாம்.

இலங்க பொலிஸ்

**மாபெரும் ஏல விற்பனை**

**பாவித்த டயர்கள், மின்கலங்கள் மற்றும் மோட்டார் உதிரிபாகங்கள் மற்றும் பல.**

சிறப்பம்சங்கள்:

**பாவித்த கணரக மோட்டார் வாகன டயர்கள் (1000x20, 900x20, 825x20, 750x20, 825x16, 600x16, 700x12, 600x09, 825x16, 12.4x11.28, 500x12),** பாவித்த ஜீப் மற்றும் Cab வாகன டயர்கள் (700x16(8PR), 750x16 (14PR), 750x16 (12PR), 750x16 (8PR), 650x16, 205x16, 700x15, 600x14, 235x70x16), **பாவித்த கார் டயர்கள் (185x70x14, 205x60x16, 234x75x15, 265x70x16, 195x65x15, 195x15, 185x14, 175x70x14, 175x70x13, 175x65x14, 185x65x14, 195x60x16, 145x80x12, 195x75x16, 265x70x15, 615/550x13),** பாவித்த மோட்டார் சைக்கிள் டயர்கள் (410x18, 400x08, 300x18, 120x80x16, 160x60x17, 120x70x17, 110x70x17, 275x18, 350x16, 275x21, 275x17, 100x90x17, **பாவித்த கணரக மோட்டார் வாகன, ஜீப், கார் மற்றும் மோட்டர் சைக்கிள்களுக்கான மின்கலங்கள்,** மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் டியூப்கள், **வாகன பெயிண்ட்,** தண்ணீர் பவுசர் தொட்டிகள், **பாவித்த நிலத்தடி எண்ணெய் தொட்டி,** பாவித்த மோட்டார் உதிரிபாகங்கள், **எரிந்த எண்ணெய்,** பாவிக்காத 12V மின்கலங்கள், **ப்ரேக் ஓயில் லிட்டர்கள், DS-30 ஓயில் லிட்டர்கள், DS-50 ஓயில் லிட்டர்கள், HC-22 ஓயில் லிட்டர்கள், SAE-20/SAE-80 ஓயில் லிட்டர்கள், SAE-30 ஓயில் லிட்டர்கள், EP-140 ஓயில் லிட்டர்கள், EP-80 ஓயில் லிட்டர்கள், MP-40 ஓயில் லிட்டர்கள், DS-10 ஓயில் லிட்டர்கள்,** Lacquer லிட்டர்கள், **மின்கல நீர் லிட்டர்கள்** மற்றும் தேவைக்கதிகமான சுபாரு மோட்டார் கார், ஹொண்டா Ecode மோட்டார் கார், டாடா 1612 பஸ், ஸ்வராஜ் மஸ்டா பஸ்களுக்கான மோட்டார் உதிரிபாகங்கள்.

**2022 மே 21ம் திகதி சனிக்கிழமை**
**காலை 10.30 மணிக்கு**

இலங்கை பொலிஸ் போக்குவரத்து பிரிவு - எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05 இல் நடைபெறும்.

**2022 மே 20ம் திகதி வெள்ளிக்கிழமை**
**காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்**

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

01. ஏல நுழைவாயிலில் தேசிய அடையாள அட்டை, வாகன உரிமம் அல்லது பாஸ்போட் கண்டிப்பாக சமர்பிக்கவேண்டும்.
02. ஏல நுழைவாயிலில் திருப்பிதரப்படாத வைப்பு ரூபா.1000/- ஏலம் நடைபெறும் நாளில் அறவிடப்படும்.
03. கொள்வனவு செய்தவுடன் 25% வைப்பு பணம் உடனடியாக காசாக செலுத்தப்பட வேண்டும் மற்றும் மீதி 75% காசு அதே நாளில் மாலை 3.00 மணிக்கு முன் கட்டயாமாக செலுத்தியவுடன் கொள்வணவு செய்யப்பட்ட பொருட்கள் உடனடியாக அதே நாள் அகற்றப்பட வேண்டும்.
04. வெற்றிபெறும் விலை மனுதாரர் விலை மனுக்களை தாமே சமர்பித்தால் அன்றி பிரதிநிதிகள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.
05. ஏல விற்பனையாளர் விபர தவறுகளை பொறுப்பேற்கமாட்டார்.
06. இறுதி முடிவு பணிப்பாளர் பொலிஸ் போக்குவரத்து மற்றும் ஏலம் விடுபவரால் மேற்கொள்ளப்படும்.
07. முன்னறிவிப்பின்றி பணிப்பாளர் - பொலிஸ் போக்குவரத்துக்கு பொருட்களை திரும்பப் பெற்றுக்கொள்வோ இடைநிறுத்தவோ உரிமையுன்டு.

**தயவு செய்து மேலதிக விபரங்களுக்கு 2022 ஏப்ரல் 22ம் திகதி அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்**

DK's AUCTIONS
To Professionally Serve the Nation

**Buy or Sell in Confidence with**
**DALLAS KELAART's Auctions (Pvt) Ltd.**
146/3, Caldera Gardens, Off Dutugemunu Street, Kohuwela
Tel: 11 4367467, 11 4367111
FB: www.facebook.com/kelaartauctions | E-mail: aucslk@gmail.com

# எரிபொருள் விநியோகம் நேற்று முதல் வழமைக்கு

## தனியார் பௌஸர் உரிமையாளர் சங்கம்

நேற்று முதல் மீண்டும் எரிபொருள் விநியோகத்தை வழமைக்கு கொண்டுவருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தனியார் தாங்கி (பௌஸர்) உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் சாந்த சில்வா தெரிவிக்கையில், விசாக பூரணை தினம், விடுமுறை தினம் என்பதால் நேற்று எரிபொருள் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், இன்றைய தினம் எரிபொருள் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பும்.

மேல் மாகாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு காலை வேளையில் எரிபொருள் கிடைக்கப்பெறும் என்பதுடன், ஏனைய மாகாணங்களுக்கு மதிய வேளையில் எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தனியார் தாங்கி (பௌஸர்) உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்திய கடன் எல்லை வசதி திட்டத்தின் கீழ் மேலும் ஒரு தொகுதி டீசல் தாங்கிய கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது. டொம் எல்வின் நிறுவனத்தின் ஊடாக குறித்த டீசல் தொகை இலங்கைக்கு

08

# இடியுடன் கூடிய மழை சில தினங்கள் தொடரும்



நாடு முழுவதும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக தாபிக்கப்பட்டு வருகின்றது.மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும்

08

அமைச்சு பதவி ஏற்காது

# புதிய அரசை ஆதரிக்க ம.ம.மு தீர்மானம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளடங்கலான புதிய அரசில் இணைந்து, எவ்வித பதவிகளையும் ஏற்காதிருக்க மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது. அரசில் இணையுமாறும், அமைச்சு பதவியை ஏற்குமாறும் மலையக மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து முடிவொன்றை எடுப்பதற்காக முன்னணியின் மத்திய குழுக் கூட்டம், ஹட்டனில் உள்ள கட்சி தலைமையகத்தில், முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணியாக, ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும் எனவும் புதிய அரசில் எவ்வித பதவிகளையும் ஏறக்கக்கூடாதெனவும் தீர்மானிக்கப்பட்டது. வன்முறையில் ஈடுபட்ட அனைவரையும் உடனடியாக கைது செய்து முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். அகிம்சை போராட்டத்தில்

08



ஐக்கிய அரபு இராஜ்ஜிய ஜனாதிபதியின் மறைவை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஐக்கிய அரபு இராஜ்ஜிய தூதரகத்தில் தனது அனுதாபங்களை தெரிவித்துக் கொண்ட போது...

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 03ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 15

## குறள் தரும் சிந்தனை



பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

விதிப்பயனால் பழி ஏற்படும் என்பது தவறு, அறிய வேண்டியவற்றை அறிந்து செயல்படாமல் இருப்பதே பெரும்பழியாகும்.

## அரசியல் கட்சிகளின் அறிவிப்பு ஏற்படுத்திய புதிய நம்பிக்கைகள்

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'. கடந்த சில வாரங்களாக இப்பழமொழி பல மட்டங்களிலும் அதிகளவில் வலியுறுத்தப்படுகின்றது. அதாவது தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம். இந்நிலையில் தான் தற்போது இப்பழமொழி அதிக முக்கியத்துவம் பெற்று இருக்கின்றது.

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டின் எல்லா மட்ட மக்களும் பல்வேறு விதமான பாதிப்புகளையும் தாக்கங்களையும் எதிர்கொண்டுள்ளனர். இந்நெருக்கடிகளும் அசௌகரியங்களும் விரைவாகவும் வேகமாகவும் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அதற்கான கோரிக்கைகளும் மக்களால் முன்வைக்கப்பட்ட வண்ணமுள்ளன.

இவ்வாறான சூழலில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுள்ளார். இவர் ஏற்கனவே நாடு முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடிகளுக்கு வெற்றிகரமாகத் தீர்வு கண்ட பரந்த அனுபவத்தையும் அறிவையும் பெற்று இருப்பவராவார். இப்பதவியை அவர் ஏற்றதோடு இப்பதவியை நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு தேவையான நடவடிக்கைகளை விரிவான அடிப்படையில் ஆரம்பித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் ஊடாகப் பாராளுமன்ற உறுப்பினரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை விடுவிப்பதே ஒரே இலக்காக உள்ளது என்று கூறியுள்ளார். தற்போதைய சூழலில் அவர் பிரதமர் பதவியை ஏற்று இருப்பது மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவென கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். அத்தோடு அரசியல் கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்துள்ளார். இது காலத்திற்கு மிகவும் அவசியமான அழைப்பும் நடவடிக்கையும் ஆகும்.

இந்த அழைப்பின் முக்கியத்துவத்தையும் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படுவதன் தேவையையும் உணர்ந்துள்ள அரசியல் கட்சிகள், அவருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க முன்வந்துள்ளன.

அந்த வகையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு நல்க முன்வந்துள்ளன. அத்தோடு ஸ்ரீ.ல.பொ. பெரமுனவில் அங்கம் வகித்து அண்மையில் அக்கூட்டணியில் இருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் 10 கட்சிகளின் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளும் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு நல்குவதாக அறிவித்து இருக்கின்றன.

பிரதமரின் அழைப்புக்கு இக்கட்சிகள் அளித்திருக்கும் சாதகமான பதில், நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக வழிவகுக்குமென அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். நாடு எதிர்கொண்டுள்ள தேசிய முக்கியத்துவம் மிக்க இப்பொருளாதார நெருக்கடியை ஒன்றுபட்டு வெற்றி கொள்ளும் போது அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் அடித்தளமாக அமைய முடியும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நாடு முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியை அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டே வெற்றி கொள்ள முடியும். அது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும். அதனை அடிப்படையாகக் கொண்ட வலியுறுத்தல்களும் பரவலாக எழுந்துள்ளன.

அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படும் போது விரைவாகவும் வேகமாகவும் இந்நெருக்கடியை வெற்றி கொள்ளக் கூடியதாக இருக்கும். அதுவே மக்களின் தேவையும் எதிர்பார்ப்பும் ஆகும். இந்நெருக்கடியை வெற்றி கொள்ளும் போது எரிவாயு மற்றும் எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் நிலைமை முடிவுக்கு வந்து விடும். பொருட்களின் விலைகளும் குறைவடையும். இவை மக்களுக்கு பெரிதும் நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும்.

ஆகவே மக்களினதும் நாட்டினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்காக பிரதமர் தலைமையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது இன்றியமையாததாகும். அது நாட்டின் எல்லா மட்ட மக்களும் முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் நிவாரணமாக அமையும். அதுவே இன்றைய உடனடித் தேவை என்றால் மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# நேபாளத்தில் புத்தர் பெருமான் அவதரித்த லும்பினிக்கு பிரதமர் மோடி நேற்று விஜயம்

இமயமலை மாநிலத்துடனான பௌத்த மதத் தொடர்பை வலுப்படுத்தவும், இந்தியாவின் மென்மையான சக்தியை மேம்படுத்தவுமென வெசாக் தினமான நேற்று (மே 16) பிரதமர் நரேந்திர மோடி, நேபாளத்தில் புத்தர் பெருமான் பிறந்த இடமான லும்பினிக்கு விஜயம் செய்தார். நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபாவின் அழைப்பின் பேரில் நேபாளம் சென்ற பிரதமர் மோடிக்கு அங்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

## மாயாதேவி ஆலயத்தில் சிறப்பு வழிபாடு; இருதரப்பு நட்புறவில் புதியதொரு ஆரம்பம்

2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரதமர் மோடி மேற்கொள்ளும் ஐந்தாவது நேபாள பயணம் இதுவாகும். புத்தரின் பிறப்பு, ஞானோதயம், புத்தரின் இறப்பு ஆகிய மூன்றுமே மே மாதம் பௌர்ணமி நாளில் வெசாக் தினமாக பௌத்தர்களால் கொண்டாடப்படுகின்றன. வெசாக்கை முன்னிட்டு புத்தர் பிறந்த இடத்தில் தரிசனம் செய்வதற்காக நேபாளம் சென்ற பிரதமர் மோடியை நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தியூபா விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்றார்.

பின்னர் இருவரும் லும்பினியில் புத்தர் பெருமான் பிறந்த இடத்தில் உள்ள மாயாதேவி கோவிலில் தரிசனம் செய்தனர். நேபாள அரசின் கீழ் உள்ள லும்பினி வளர்ச்சி அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ள புத்த பூர்ணிமா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரதமர் மோடி உரையாற்றினார்.தொடர்ந்து புத்த துறவிகள் மடத்தில் புத்த கலாசார பாரம்பரிய நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் மோடி பங்கேற்றார். இதையடுத்து நேபாள பிரதமருடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

கல்வி, கலாசாரம் உறவை வலுப்படுத்தும் வகையில் இரு நாடுகள் இடையே 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. நேபாளத்துக்கு மோடி செல்வதை முன்னிட்டு, இந்திய_நேபாள எல்லையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

பிரதமர் நரேந்திர மோடி நேற்றுக் காலை உத்தரப் பிரதேசத்தின் குஷிநகர் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு நேபாளம் சென்றடைந்தார். பிரதமருடன் நேபாள பிரதமர் ஷேர் பகதூர் தூபாவும் அவரது மனைவி டாக்டர் அர்சு ராணா தூபாவும் மாயாதேவி ஆலயம் சென்றிருந்தனர். கோவில் வளாகத்தின் உட்பகுதியில் உள்ள குறியீட்டுக் கல்லுக்கு இருநாட்டு தலைவர்



## புத்த கலாசார பாரம்பரிய நிலையம் நிர்மாணிப்பதற்கு நேற்று அடிக்கல்

களும் மரியாதை செலுத்தினர். இது பகவான் புத்தரின் மிகச்சரியான பிறப்பிடம் என்பதைச் சுட்டிக்காட்டுவதாகும். புத்த சமய முறைகளின்படி நடைபெற்ற பூஜையில் அவர்கள் பங்கேற்றனர். ஆலயத்திற்கு அருகே அமைக்கப்பட்டுள்ள அசோகர் ஸ்தூபி அருகே இரு பிரதமர்களும் விளக்குகள் ஏற்றி வைத்தனர்.

இந்தத் தூண் கி.மு. 249 இல் அசோக சக்கரவர்த்தியால் நிறுவப்பட்டது. பகவான் புத்தரின் பிறப்பிடம் என்பதற்கான முதல் கல்வெட்டு ஆதாரமாக லும்பினியில் இது உள்ளது. இதன் பிறகு புத்தகயாவில் இருந்து கொண்டு வரப்பட்டு 2014 இல் லும்பினிக்குப் பிரதமர் மோடியால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட போதி மரக்கன்றுக்கு இரு பிரதமர்களும் நீர் வார்த்தனர். ஆலயத்தின் வருகையாளர் பதிவேட்டிலும் கையெழுத்திட்டனர். மேலும் இந்திய சர்வதேச மையத்தில் பூமி பூஜை நிகழ்ச்சிகளிலும் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.



கடந்த சில மாதங்களுக்கு முன் நேபாளத்துடன் ஏற்பட்ட கசப்பான மோதல்கள் குறித்தும் பிரதமர் மோடி ஆலோசனை செய்ததாக இந்திய செய்திகள் தெரிவித்தன.

சீனா எப்படியாவது நேபாளத்தை தன் பக்கம் கொண்டு வர முயற்சிக்கிறது. 'ரோட் அண்ட் பெல்ட்' திட்டம் மூலம் நேபாளத்தில் நலத்திட்டங்களை செய்ய சீன முயன்று வருகிறது. இந்த நிலையில்தான் பிரதமர் மோடியின் நேற்றைய பயணம் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

நேபாளத்தின் லும்பினியில் புத்தமத கலாசார பாரம்பரிய நிலையம் கட்டுவதற்கு பிரதமர் மோடியும், நேபாள பிரதமரும் இணைந்து நேற்று அடிக்கல் நாட்டினர். இதுதவிர மேலும் சில நிகழ்ச்சிகளில் மோடி பங்கேற்றார். குறிப்பாக நேபாள அரசின் கீழ் இயங்கும் லும்பினி வளச்சி அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற புத்த ஜெயந்தி விழாவில் உரையாற்றினார். அதன்பின்னர் இரு நாட்டு பிரதமர்கள் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அக்டோபர் 2021 இல், பிரதமர் நரேந்திர மோடி கிழக்கு உத்தர பிரதேசத்தில் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் புத்த யாத்திரிகர்கள் மஹாபரிநிர்வாண கோயிலின் முக்கியமான தளத்தை அடைய வசதியாக அந்த விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

பிரதமர் மோடி தனது இராஜதந்திர பயணங்களில் பௌத்த மதத்துக்கு மிகுந்த முக்கியத்துவமும் கௌரவமும் வழங்குவது வழக்கமாகும்.

வெளிநாடுகளுக்கான பயணங்களில், பிரதமர் நரேந்திர மோடி முடிந்தவரை பௌத்த கோவில்களுக்குச் செல்வது வழக்கம். இந்தியா மற்றும் உலகம் ஆகிய இரண்டின் வளர்ச்சிக்கும் பௌத்த மதத்தின் முக்கியத்துவத்தை பிரதமர் மோடி பாராட்டிப் பேசுவதுண்டு.

கி.மு 3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்தம் மௌரிய வம்ச மன்னர் அசோகரின் ஆதரவைப் பெற்றது, அவர் வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே இலங்கை வரை செல்வாக்குச் செலுத்திய சக்கரவர்த்தி ஆவார். அவரது காலத்திலேயே பௌத்தம் உலகின் பல நாடுகளுக்கும் பரவியது.

# யாழ் மாநகர முன்னாள் முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் 24 ஆவது நினைவு தினம் இன்று



யாழ். மாநகர முன்னாள் முதல்வர் அமரர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவர்களின் 24ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். யாழ். மாநகர மேயராகப் பணியாற்றிய திருமதி சரோஜினி யோகேஸ்வரன் கடந்த 1998 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

மாநகர சபையில் முதல்வராகப் பணியாற்றிய காலத்தில் மிகுந்த ஆளுமை மிக்கவராக அவர் செயற்பட்டார். நிருவாகத் திறனும், துணிச்சலும் கொண்ட பெண்மணியாக அவர் திகழ்ந்தார். யுத்தம் நிலவிய அக்காலத்தில் மிகுந்த நெருக்கடியான சூழலில் பணியாற்றிய முதல்வராக அவர் விளங்கினார்.

இந்நிலையில் 17. 05.1998 அன்று ஆயுததாரிகளால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். முன்னாள் யாழ் மாநகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவர்களின் 24ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் அலுவலகத்தில் இன்றைய தினம் நினைவு அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் முன்னர் அமரர் சரோஜினி யோகேஸ்வரன் அவர்களின் இறுதி நிகழ்வு நடைபெற்ற வேளையில் முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான மர்ஹூம் அஷ்ரப் மற்றும் எம். எல்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும் பங்குகொண்டு அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது என்று யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் தங்க முகுந்தன் தனது நினைவைப் பகிர்ந்து கொண்டார்.

# மாத்தளை பிரதேச சமூகசேவகர் ஸைனுதீன் மாஸ்டர் காலமானார்

முன்னாள் ஆசிரியரும், முஸ்லிம் விவாகப் பதிவாளரும், சமூக சேவையாளருமான அகில இலங்கை சமாதான நீதவான் முஹமட் ஹனிபா ஸைனுதீன் மாஸ்டர் அண்மையில் காலமானர். அன்னாரின் ஜனாசா கடந்த 07.05.2022 மாலை மாத்தளை கொங்காவல முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த 06.05.2022 திடீர் சுகவீனமுற்று மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஸைனுதீன் மாஸ்டர் சிகிச்சை பலனின்றி மாத்தளை ஆதார வைத்தியசாலையில் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 85 ஆகும். 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி முஹமட் ஹனிபா தம்பதிகளின் புதல்வராகப் பிறந்த இவர், மாத்தளை விஜயா கல்லூரியில் கல்வி கற்று விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றினார்.

அங்கு ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று அவர் விஞ்ஞான ஆசிரியரானார். இனங்களிடையே நல்லுறவை ஏற்படுத்த அவர் அயராது பாடுபட்டார்.



மாத்தளையில் இயங்கும் பல சமூக அமைப்புகளில் இவரது பங்களிப்பு அளப்பரியதாகும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அவர் விஞ்ஞான பாட பயிற்சி பெற்றார். இரண்டு வருட ஆசிரியர் பயிற்சியின் பின்னர் ஸைனுதீன் மாஸ்டர் விஞ்ஞான ஆசிரியராக 1962 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்ட திகாரிய கலகெடிஹேன தாருஸ் முஸ்லிம் மகா வித்தியாலத்திற்கு நியமிக்கப்பட்டார். 1968 ஆம் ஆண்டு மாத்தளை ஸாஹிரா ஆண்கள் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யட்டார்.

மாணவர்களின் உள்ளங்களின் என்றும் மறக்க முடியாத ஆசான்களின் பட்டியலில் ஸைனுதீன் மாஸ்டரும் இடம்பெற்றுள்ளார்.

1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை மாத்தளை ஸாஹிரா கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்த இவர் 1977 ஆம் ஆண்டு ஓட்டமாவடி முஸ்லிம் பாடசாலைக்கு இடமாற்றப்பட்டார். இவரது ஜனாசா நல்லடக்கத்தில் தமிழ், முஸ்லிம் சிங்கள பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம் மஸாஹிம்
(மாத்தளை நிருபர்)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் விளக்கேற்றி அஞ்சலி



**காரைதீவு குறூப்நிருபர்**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (16) திங்கட்கிழமை கல்முனை மாநகரில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது .


அங்கு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ.சிறிநேசன், பா.அரியநேத்திரன் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் மேயர் தி.சரவணபவான், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி காய்ச்சி அங்கு பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

முதலிலே நெய் விளக்கு ஏற்றப்பட்டு அந்த மக்களுக்காக ஆத்மார்த்த அஞ்சலி செலுத்தப்பட்டது.



பெரியகல்லாறு கடல்நாச்சி அம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கை முன்னிட்டு பெரிய கல்லாறு ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து கடல்நாச்சி அம்மன் ஆலயத்திற்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான பல பெண்கள் கலந்து கொண்ட பாற்குடப் பவனி இடம்பெற்ற போது,.... (படம்: கல்லாறு தினகரன் நிருபர்)




# நாங்கள் நீதி கேட்பது சர்வதேசத்திடமே

## அருட்பணி ஜெகதாஸ்



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

அரசிடம் தமிழர்கள் எந்த நீதி நியாயத்தையும் எதிர்பார்க்க முடியாது. இது கடந்த 75 ஆண்டுகளாக நாம் கண்ட உண்மை. நாங்கள் நீதி கேட்டு நிற்பது சர்வதேசத்திடம்தான் என அருட்பணி கந்தையா ஜெகதாஸ் தெரிவித்தார்.

பொத்துவில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையிலான பயணத்தின் மே18 இன விடுதலை தேடி முள்ளிவாய்க்கால் நோக்கிய பயணம்" ஞாயிற்றுக்கிழமை(15) மாலை களுவாஞ்சிகுடியை வந்தடைந்தது. இதன்போது அக்குழுவால் வீதியில் சென்ற மக்களுக்கு கஞ்சி வழங்கி 'சர்வதேசமே எமக்கு நீதியைப் பெற்றுத்தா' என கோசமிட்டனர். இதன்போது கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்...

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் வைத்து செய்த இனப்படுகொலைக்காக நாம் பொத்துவில் இருந்து முள்ளிவாய்க்கால் வரைக்கும் நீதி வேண்டி நடைபவனியாகச் செல்கின்றோம். நாங்கள் இனப்படுகொலைக்காக 13 வருடங்களாக நீதிகேட்டோம், வலிந்து காணாமலாக்கப்பட்வர்கள் எங்கே என்று நாம் கேட்டோம், கையளிக்கப்பட்டவர்கள் எங்கே என்று கேட்டோம், எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

தொடர்ச்சியாக 13 வருடகாலமாக கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை தமிழர் தாயகத்தில் நிறைவேற்றி வந்தது. எனவே வருகின்ற புதன்கிழமை(18) தமிழின அழிப்பு நாளாக இருக்கின்றது.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த உதயகுமார் உதயகாந்த் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்ட சமாதான நீதவானாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் சத்தியபிரமாணம் செய்துள்ளார்.

இவர் மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், கொழும்பு மாதம்பிட்டி புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரக் கல்வியையும், கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தில் தனது உயர்தரக் கல்வியையும் கற்று குறித்த பாடசாலைகளின் பழைய மாணவருமாவார்.

# கிழக்கில் கடும் வெப்பம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கிழக்கில் அதிக வெப்பம் நிலவி வருவதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அதிக வெப்பத்தினால் சிறுவர்கள் முதியவர்கள் உட்பட பலரும் தொற்று நோய்களுக்கும் ஆளாகிவருகின்றனர்.

இங்கு வயிற்றோட்டம், தோல்நோய்கள், தலையிடி, காய்ச்சல், மஞ்சள்காமலை போன்வற்றால் பாதிக்கப்படும் மக்கள் பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுச்செல்கின்றனர். இக் காலப்பகுதியில் மின் வெட்டும் அமுலில் இருப்பதினால் பகல், இரவு நேரங்களில் வீடுகளுக்குள் இருக்கமுடியாது மக்கள் மரநிழல்களையும், கடற்கரை போன்ற பொது வெளியையும் நாடிச்செல்கின்றனர்.

இதேவேளை இடையிடையே மழையுடன் கூடிய காலநிலையும் நிலவிவருகின்றது. இதனால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாகவும் பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

# ஹரீஸ் 20க்கு ஆதரவளித்த நோக்கத்தை கல்முனை மக்கள் அறிவர்



## ஐக்கிய காங்கிரஸ்

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் 20க்கு ஆதரவளித்தது பதவிக்கு ஆசைப்பட்டல்ல என்பதை நாம் அறிவோம்.

கடந்த ஆட்சியில் முஸ்லிம் அமைச்சர்கள், ஆளுனர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என இனவாத நோக்குடன் ரத்னதேரர் உண்ணாவிரதம் இருந்த போது அனைவரும் இராஜினாமா செய்து பின் அமைச்சர்கள் மீண்டும் பதவி பெற்ற போது எச்.எம்.எம். ஹரீஸ் மட்டும் அமைச்சு பதவியை நிராகரித்தார்.

அது போன்று 20க்கு கை உயர்த்தியமைக்கான காரணம் கல்முனை பிரச்சினையாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி கலாபூசணம் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயமானது, எச்.எம்.எம். ஹரீஸ் 20க்கு கை உயர்த்தியமைக்கான ஒரே காரணம் கல்முனை பிரச்சினையாகும். இதனால் ஐக்கிய காங்கிரஸ் கட்சியினராகிய நாம் அவரை வாழ்த்தியிருந்தோம். கல்முனை முஸ்லிம்களில் 90 வீதமானோர் எச்.எம்.எம். ஹரீசின் இந்த செயலை உள்ளார்ந்த ரீதியாக பாராட்டினர் என்பதே உண்மை.

ஆனாலும் ரணில் ஆட்சியில் கல்முனை பிரச்சினை தீருமா அல்லது இன்னும் கொதிப்படையுமா என்பதெல்லாம் அடுத்து வரும் சோடாப்போத்தல் அரசியலாகும் என்று தெரிவித்துள்ளார்.

# பொருளாதார கட்டமைப்பை முன்பை விட வேகமாக, நிலையாக செயல்படுத்த வேண்டும்

## தனியார் துறை அரசிடம் கோரிக்கை

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு சிறந்த தீர்வு நாட்டின் பொருளாதார கட்டமைப்பை முன்பை விட வேகமாகவும் நிலையானதாகவும் செயல்படுத்த வேண்டும் என தனியார் துறை கோரியுள்ளது .

இது தொடர்பில் இலங்கை பொருள் தயாரிப்புகள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம்,கொழும்பு றப்பர் வியாபாரிகள் சங்கம்,சுங்க உற்பத்தியாளர் சங்கம், கொள்கலன் போக்குவரத்து சங்கம்,இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் சங்கம், இலங்கை இறக்குமதி,ஏற்றுமதி கப்பல்போக்குவரத்து சபை என்பன கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஒரு நாடு என்ற வகையில் தடுக்கக்கூடிய மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணிகளால் நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி தற்போது அரசியல் மற்றும் சமூக நெருக்கடியாக மாறி உயிர்களையும் உடைமைகளையும் அழிக்கிறது. இந்த ஆபத்தான மற்றும் பாதுகாப்பற்ற நிலைமை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உந்து சக்தியான தனியார் துறையை இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது, ஆனால் இவை அனைத்திற்கும் மத்தியிலும், இலங்கை பொருளாதார ஓட்டத்தின் பொறிமுறையைத் தக்கவைக்க தனியார் துறை தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நிச்சயமற்ற தன்மை மற்றும் பாதுகாப்பின்மை ஆகியவற்றிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காக நாம் எதிர்கொள்ளும் பொருளாதார பிரச்சினைகளுக்கு பொருளாதார தீர்வுகளை வழங்குவதற்கான அவசரத் தேவையை முன்னெடுக்க வேண்டும் .

அத்தியாவசிய உணவுப் பொருட்கள், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்துள்ளதோடு, அந்நியச் செலாவணி மற்றும் சுற்றுலா மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியின் பங்கு கடந்த மூன்று ஆண்டுகளாக படிப்படியாகக் குறைந்து வருகிறது. இலங்கை இறக்குமதியில் அதிகம் தங்கியிருப்பதால், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் நமது வெளிநாட்டு வருமானத்தில் கணிசமான சதவீதம் நாட்டுக்கு தேவைப்படுகிறது. மேலும், இலங்கையின் விகிதம் 2022 ஆம் ஆண்டளவில் 7.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டும்.




# கொமர்ஷல் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளராக சனத் நியமனம்



கொமர்ஷல் வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாக இருந்த சனத் மனதுங்க வங்கியின் புதிய முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. 2022 மே 12 முதல் இந்நியமனம் அமுலுக்கு வருகின்றது. சனத் மனதுங்கவின் பதவி உயர்வின் தொடராக செல்லத்துரை பிரபாகர் வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

2022 மே 11ல் ஓய்வு பெற்ற சிவகிருஷ்ணராஜா ரெங்கநாதனின் பதவிக்கே சனத் மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். ரெங்கநாதன் கொமர்ஷல் வங்கியில் 41 வருட கால கீர்த்திமிக்க சேவையை நிறைவு செய்கின்றார். சனத் மனதுங்க கடந்த 32 வருடங்களாக வங்கியில் பணியாற்றி வருகின்றார். இதில் கடந்த நான்கு வருடங்களாக நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரியாகவும் அவர் பணிபுரிந்துள்ளார்.

# சிங்கர் நிறுவனம், ஆண்டின் மிகச் சிறந்த விநியோகஸ்தர் விருதை வென்றுள்ளது




சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி, Dell Technologies ஏற்பாடு செய்த ஆசியாவிலுள்ள வளர்ந்து வரும் சந்தைககளின் விநியோகஸ்தர்களுக்கான விருதுகள் 2022 (AEM) நிகழ்வில், தனக்கே உரிய அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ளது. நாட்டில் கணினிகள் மற்றும் கணினி துணைச் சாதனங்களை வழங்குவதில் முன்னணி நிறுவனமாக, தனது ஸ்தானத்தை மீண்டும் உறுதிபட வலியுறுத்தி, சிங்கர் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வர்த்தகப் பிரிவில் ஆண்டின் மிகச் சிறந்த விநியோகஸ்தர் விருதை வென்றுள்ளது.

சமீபத்திய சாதனை குறித்து சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியின் சந்தைப்படுத்தல் துறை பணிப்பாளரான ஷனில் பெரேரா அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "எங்கள் நீண்டகால கூட்டாளரான Dell இடமிருந்து இந்த மதிப்புமிக்க விருதை நாம் பணிவுடனும், கௌரவத்துடனும் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த அங்கீகாரமானது சிங்கரின் ஈடு இணையற்ற விற்பனை பலம், வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகள் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கு சான்றாகும். Dell உடனான எங்களது கூட்டாண்மை கடந்த சில ஆண்டுகளில் மேலும் வலுப்பெற்றுள்ளதுடன், இரு நிறுவனங்களுக்கும் பரஸ்பரம் வெற்றியளிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது," என்று குறிப்பிட்டார்.

# இலங்கை கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக மூஸ் ஆடை நிறுவனம்



கிரிக்கெட்டின் சிலிர்ப்பையும் உற்சாகத்தையும் முன்னெடுத்துச் செல்லும் இலங்கையின் இளமை மற்றும் நவநாகரிக ஆடை வர்த்தக நாமமான மூஸ் ஆடை நிறுவனம், இலங்கையின் பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தின் டெஸ்ட் தொடரில் தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக இலங்கை கிரிக்கெட்டுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும். முதல் டெஸ்ட் மே 15 முதல் 19 வரை நடைபெறுவதோடு 2வது டெஸ்ட் போட்டி மே 23 முதல் 27 வரை தொடங்குகிறது.

இலங்கை கிரிக்கெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஆஷ்லி டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "பங்களாதேஷ்க்கு எதிரான எதிர்வரும் டெஸ்ட் தொடர் இலங்கைக்கு ஒரு முக்கியமான போட்டியாகும், ஏனெனில் நாங்கள் ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில் முன்னேறுவதற்கு தயாராகி வருகிறோம். இந்த முயற்சியில் மூஸ் க்ளோதிங்கின் கூட்டாண்மையின் ஒத்துழைப்பை வரவேற்கிறேன்."

விளையாட்டின் மீது மிகுந்த விருப்பத்துடன், மூஸ் ஆடை நிறுவனம், தேசிய கிரிக்கெட் அணிக்கு அனுசரணை வழங்க பல்வேறு திறன்களில் இலங்கை கிரிக்கெட்டுடன் தொடர்ச்சியாக பல சந்தர்ப்பங்களில் கூட்டு சேர்ந்துள்ளது.

# அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் ஆதரவு

கொழும்பு மற்றும் இலங்கையின் பிற பகுதிக ளில் இடம் பெற்றவன் முறை மற்றும் அதனால் ஏற்பட்ட உயிர்சேதம் துரதிர்ஷ்டவசமானது மற்றும் ஆழ்ந்த வ ருத்த மளிக்கிறது.மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களில் பொருளாதார நெருக்கடியின் அசாதாரணமான பாதகமான தாக்கம் குறித்து மக்களின் துயரம் குறித்தும் நாங்கள் அனுதாபம் கொள்கிறோம். எவ்வாறாயினும், விலைமதிப்பற்ற மனித உயிர்களை பலிவாங்கும் வன்முறையானது வன்மையான கண்டனத்திற்குரியது. நாடு முழுவதும்அரசியல் ஸ்திரத்தன்மையை உடனடியாக மீட்டெடுக்குமாறு அதிகாரிகளையும் கேட்டுக் கொள்கிறோம். இந்தகடினமான நெருக்கடியின் மூலம் நாம் கூட்டாகஇணைந்து செல்லும்போது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான வாழ்க்கை மற்றும் பணிச்சூழலை அவர்கள் உறுதி செய்யவேண்டும்.

அதேவகையில், அமைதியான, ஜனநாயக ரீதியிலான அதிகாரமாற்றத்தை உறுதி செய்வதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் வலுவாக ஆதரவளிக்கிறோம். தற்போதைய அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதிய அரசாங்கம் அவசரமாக நியமிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

நெருக்கடிக்கு முற்றுப் புள்ளி, சாத்தியமான வன்முறையற்ற மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு திரும்புதல் ஆகிய முடிவைத் தேடும் ஏனைய அனைத்து நிறுவனங்களின் முயற்சிகளையும் நாங்கள் ஆதரிப்போம்.

# சவாலை வெற்றிகொள்ள அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்

## நாட்டு மக்களுக்கான உரையில் பிரதமர் ரணில் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

"உயிரைப் பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினது ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்."

இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது ,

கடந்த வியாழக்கிழமை நான் பிரதமர் பதவியை பொறுப்பேற்றேன். அந்தப் பதவியை நான் கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அரசியல் தலைவராக மட்டுமின்றி, இலவசக் கல்வியை அனுபவித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டம் பெற்ற உயர்ந்த தேசியத் தலைவர் என்ற வகையிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபாய்கள் வருமானமாக உள்ளன என காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வுகூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன.

2022 ஆம் ஆண்டிற்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபாய்கள். எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாய்களாகும். வருடத்திற்கான வரவுசெலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாய்களாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும் .

அதேபோன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3200 பில்லியன் ரூபாயாகும். நாம் மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1950 மில்லியன் ரூபாய்களை செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி 1250 மில்லியன் ரூபாய்கள். நாம் நேற்று அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3000 பில்லியனில் இருந்து 4000 பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்க ஒரு தீர்மானத்தை எடுத்தோம்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சினால் தேடிக்கொடுக்க முடியாதுள்ளது.

இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிகமோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சிலநாட்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிகவிரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேடவேண்டிய உள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜூன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்கள் வரவுள்ளன. இன்றுவரை 40 நாட்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகெண்ணெய், எண்ணெய் ஏற்றி வந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக் கொள்ள நடவடிகை எடுக்கப்படும்.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால் நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம். அதேபோன்று முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை கூடிய விரைவில் தேடவேண்டும். மண்ணெண்ணெய் மற்றும் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது. இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சிறியது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியில் நேற்று ஒரு டீசல் ஏற்றிய கப்பலை நேற்று கொண்டு வந்தோம். அதனால் இன்று முதல் அந்த டீசலை உங்களால் பெற்றுக் கொள்ள முடியும். அதன்பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது. அதேபோன்று வந்துள்ள எரிவாயு கப்பலுக்கான கட்டணத்தை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் செலுத்த நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் மூலம் உங்களின் எரிவாயு பிரச்சினைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இதற்கு இடையில், மற்றுமொரு உதாரணம் மருத்துவ மருந்துகளுக்கான தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உட்பட பல மருத்துவ மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. மருத்துவ மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொகை 34 பில்லியன் ரூபாய்களாகும். அதேபோன்று அரச ஔடதக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 04 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால் அவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. 14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கள் பிரிவிற்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது. இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்திற்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதற்கிடையில் 2022 ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவுசெலவு திட்டத்திற்கு பதிலாக புதிய வரவுசெலவு திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவுசெலவு திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.



அதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன். 2020 – 2021 ல் மட்டும் ஸ்ரீலங்கன் விமான சேவை 45 பில்லியன் ரூபாய்கள் நட்டமடைந்துள்ளது. 2021 மார்ச் 31 ஆகும்போது இதன் மொத்த நட்டம் 372 பில்லியன்களாக இருந்தது. நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நட்டத்தை நாமே ஏற்க நேரிடும். இந்த நட்டத்தை வாழ்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய காலத்திற்கு நாம் இதனை விட மோசமான காலத்திற்கு முகம் கொடுக்கப் போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.

அரசாங்கம் தற்போது 92 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ. 84.38, 95 பெற்றோல் லீட்டர் ஒன்றில் ரூ. 71.19 , டீசல் லீட்டர் ஒன்றில் ரூ. 131.55 சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீட்டர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது. அதேபோல இலங்கை மின்சார சபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 17 ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபாய்கள் வரை செலவு செய்கிறது. அதன்படி ஒரு அலகிற்கு 30 ரூபாய்கள் நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படாவிட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், உங்களுக்கு தேவையான பொருட்கள் சேவைகளின் பொருட்டே அதனை செய்யவுள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக்கூட தேட முடியாதுள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலகட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்த வகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்திற்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஸ்டமான காலத்திற்கு முகம் கொடுக்க போகின்றோம். இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்திற்கு மட்டுமே. எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால் இதில் இருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலைமை சம்பந்தமாக எதிர்கட்சி தலைவர் உட்பட கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளித்தமை குறித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தற்போது நிலவும் இந்த சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

அதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத்திற்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொதுவான குறுகிய கால மத்தியக் கால – மற்றும் நீண்ட கால செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும். மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாடு, விவசாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள நாடு, இளைஞர் யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாடு, மனித வளம் போராட்டக் களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாடு, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நாடு, மற்றும் மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்.

நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப்பிடி இல்லை. என்னுடைய கால்களில் கலற்ற முடியாத பாதணிகள் போடப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையை பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்த சவாலை நான் நாட்டிற்காகவே பொறுப்பேற்றேன். எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன், ஒரு குடும்பம், அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுவதே, இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே. உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள். நான் எனது கடமையை நாட்டிற்காக செய்து முடிப்பேன். அது நான் உங்களுக்கு அளிக்கும் உறுதியாகும் என்றார் பிரதமர்.

---

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

## தையல் பயிற்சியினை நிறைவு செய்த அணியினருக்கு சான்றிதழ் வழங்கல்



கிளிநொச்சி கருணா நிலையத்தில் தையல் பயிற்சியினை நிறைவு செய்த 11ஆவது அணியினருக்கு நேற்று சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆறு மாத இலவச தையல் பயிற்சியினை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களினால் வடிவமைக்கப்பட்ட ஆடைகளும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கருணா நிலையம் கிளிநொச்சியில் கல்விப் பணி, சமயப் பணிகளையும் பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றிவருகின்றது. அந்த வகையில் தொழிற் பயிற்சியாக தையல் பயிற்சியினையும் வயது வேறுபாடின்றி அனைவருக்கும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்தினரால் உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு







**பரந்தன் குறூப் நிருபர்**

இராணுவத்தினரால் வெசாக் தினத்தை முன்னிட்டு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஐஸ்கிறீமும் வழங்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் கிளிநொச்சி காமினி சென்டர் வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 1500 பேருக்கு உலருணவு பொதிகள் இராணுவத்தினரால் பகிர்ந்தளிக்கப்பட்டன. தொடர்ந்து ஏ 9 வீதியில் வெசாக் தின கொண்டாட்டத்தினையொட்டி ஐஸ் கிறீமும் வழங்கப்பட்டது. குறித்த நிகழ்வில் முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்ட இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் வணசிங்க உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று வவுனியா மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் கஞ்சி வழங்கப்பட்டது. ஓமந்தை விஷேட நிருபர்






பளை இளைஞர் அணியினரால் பளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (15) முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கப்பட்டது. கரவெட்டி தினகரன் நிருபர்



யாழில் வெசாக் தினமான நேற்றுமுன்தினம் பாதுகாப்புத் தரப்பினரால் பொதுமக்களுக்கு உணவு மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. மானிப்பாய் பொலிஸாரால் குளிர்பானம் வழங்கப்பட்டதுடன் இராணுவத்தினரால் பருத்தித்துறைப் பகுதியில் காலை உணவு வழங்கப்பட்டது. (கரவெட்டி தினகரன் நிருபர்)

# இந்தியாவின் அருளாளர் தேவசகாயம் உட்பட பத்து அருளாளர்கள் புனிதர்களாக அறிவிப்பு

## திருத்தந்தை பிரான்சிஸ் தலைமையில் வத்திக்கானில் சிறப்புத் திருப்பலி



வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் தலைமையேற்று நிறைவேற்றிய கூட்டுத்திருப்பலியில் மறைசாட்சி அருளாளர் தேவசகாயம் உள்ளிட்ட பத்து அருளாளர்கள் புனிதர்களாக அறிவிக்கப்பட்டனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் நிறைவேற்றிய பாஸ்கா கால 5ஆம் ஞாயிறு திருப்பலியில், திருத்தந்தையோடு இணைந்து இந்தியாவின் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவரான மும்பை பேராயர் கர்தினால் ஒஸ்வோல்ட் கிரேசியஸ், தமிழக ஆயர் பேரவைத் தலைவரான சென்னைமயிலை ஜோர்ஜ் அந்தோனிசாமி உட்பட இந்தியாவின் பல்வேறு மறைமாவட்டங்களின் ஆயர்கள் என இருபதுக்கும் மேற்பட்ட இந்தியத் திருஅவைத் தலைவர்கள் உட்பட பல்வேறு நாடுகளின் ஐம்பது கர்தினால்கள், 150 ஆயர்கள், 150 அருள்பணியாளர்கள் இக்கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினர்.



அருளாளர்கள் டைட்டஸ் பிராண்ட்ஸ்மா; லாசருஸ் தேவசகாயம்; சீசர் தெ புஸ்; லூயிஜி மரியா பலாஸ்ஸோலோ; ஜூஸ்தீனோ மரியா ருசோலில்லோ; சார்ல்ஸ் து ஃபுக்கு; மரிய ரிவியெர்; மரிய இயேசுவின் பிரான்செஸ்கா ருபாத்தோ; இயேசுவின் மரிய சாந்தோகனாலே; மரிய தொமேனிக்கோ மாந்தோவானி ஆகியோரைப் புனிதர்களாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்தார். திருப்பலியிலும், அது தொடர்புடைய ஏனைய கொண்டாட்டங்களிலும் இந்தியா, பிரான்ஸ், பிரிட்டன், சுவிட்சர்லாந்து உட்பட பல நாடுகளிலிருந்து, ஆயிரக்கணக்கானதமிழர்கள் உட்பட இந்தியர்களும் கலந்துகொண்டனர்.

முதலில் திருப்பலியில் 10 அருளாளர்களை புனிதர்களாக அறிவிப்பதற்கான பரிந்துரை, கர்தினால் மர்ச்செல்லோ செமராரோ அவர்களால் திருத்தந்தையிடம் முன்வைக்கப்பட்டது. புதிய புனிதர்களின் வாழ்க்கை குறிப்பும் அனைவருக்கும் வாசிக்கப்பட்டபின் புனிதர்களின் பரிந்துரையைக் கேட்கும் மன்றாட்டும் இடம்பெற்றது. அதன் பின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த 10 அருளாளர்களையும் புனிதர்களாக அறிவித்தார். திருப்பலியின் இறுதியில் புனித பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களோடு இணைந்து அல்லேலூயா வாழ்த்தொலி செபத்தையும் செபித்துடன் அங்கு குழுமியிருந்த அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## கருணை மழையே...!



கருணை மழையே கனிவின் உருவே
அரும்பும் மலரின் அழகே திருவே
உருகி அழைத்தேன் உயிராய் உனையே
வருத்தம் விலக்கிட வா .

ஞான வடிவே நலமருள் ராணியே
வான ஒளியே! வருவாயே மோன
தவமே தெளிவினைத் தந்து மனத்தின்
கவலை துடைப்பாய் கனிந்து .

மரியேயுன் நாமம் மகிமைப் படுத்திப்
பரிவளிக்க கண்கள் பனிக்கும் திரியில்
சுடரென மின்னும்! சுகம்பிறக்கும்! எங்கும்
படர்ந்திடும் பேரன்பைப் பார் .

அன்பின் சிகரம் நீ அன்னையர்க்கன்னை நீ

தன்னிக ரில்லாத் தயாபரி நீ பொன்னெழில்நீ
கேவியழும் சேய்குரல் கேட்டு விரைந்து வந்து
இப் பாவிக்குத் தாலாட்டு பாடு .

தேவரீர் அன்னையே தேடிவந்தேன் உன்னையே
ஆவலுடன் நம்பினேன் ஆட்கொள்வாய் பாவத்தைப்
போக்கிடும் தேவமரி புண்ணிய பூமியில்
நீக்கமற என்னுள் நிறை.

மன்றாடு கின்றேனே மாதா இரங்காயோ
மன்னிப்பை நீயும் வழங்காயோ மண்ணுயிர்
காக்கும் புனிதையே கைகூப்பும் சேயென்னைத்
தூக்கி யணைத்தால் சுகம் .

நித்திரை இல்லையம்மா நிம்மதியும் போனதம்மா

இத்தரணி வாழ்வோ எரிக்குதம்மா சத்தியத்தின்
பேரொளியே கன்னிகையே
பிள்ளையெனைக் கண்பார்த்துச்
சீரொடு வாழ்ந்திடச் செய்.

மாதாவுன் பேரருளை மாரியாய்ப் பெய்கிறாய்
நீதான் வழித்துணையாய் நிற்கிறாய் பாதார
விந்தம் பணிந்தேன் வியனுல(கு) ஏகிடச்செய்
சந்தத முன்நினைப்பே சால்பு .

ஊனமுற்ற நெஞ்சத்திற்(கு ஊன்றுகோல் நீதானே
தேனமுத பாக்களால் சேவிப்பேன் வானரசி
தோளி லெனைச்சுமப்பாய் தூயவளே மாதாவுன்
தாளினைப் பற்றினேன் தாங்கு.

மெழுகுவர்த்தி ஏற்றிவைத்து மெய்விதிர்க்க நின்று
தொழுதிடுவேன் உன்பாதம் தொட்டு முழுமனதாய்
நீயே கதியென நெஞ்சுருகி வேண்டிடுவேன்
தாயேயென் நற்றுணைநீ தான் .

சியாமளா ராஜசேகர்மாதா

## புல்லுமலை புனித செபமாலை அன்னை திருவிழா







கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிகு ஆலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு பெரிய புல்லுமலை புதுமை மிகு புனித செபமாலை அன்னை திருத்தல வைகாசித் திருவிழா மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

அன்னையின் திருத்தல வைகாசித் திருவிழாவானது கடந்த 6 ஆம் திகதி மாலை பங்குத்தந்தை அருட்பணி பேதுரு ஜீவராஜ் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனை வழிபாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து கடந்த 13ஆம் திகதி காலை 6.30 மணிக்கு கித்துள் புனித மார்டின் தெ போரஸ் ஆலயத்தில் இருந்து பெரிய புல்லுமலை தூய செபமாலை அன்னை திருத்தலம் நோக்கிய யாத்திரை ஆரம்பமாகியதுடன் மறுநாள் 14 ஆம் திகதி அன்னையின் திருச்சுரூப பவனி திருத்தலத்தை வந்தடைந்ததும் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் திருவிழா கூட்டுத் திருப்பலி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கொடியிறக்கத்துடன் ஆலய திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருவிழா திருப்பலியில் கலந்துகொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றுக்கொண்டனர். அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் என பெருந்திரளானோர் திருவிழா நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





தகவல்,படங்கள்;கல்லடி குறூப் நிருபர்




# நாம் அன்பில் இணைந்து வாழ்வதே இயேசுவின் இலட்சியக் கனவு

இயேசு நமக்கு கற்றுக் கொடுத்திருக்கும் பாடங்களை எல்லாம் கூட்டி, வகுத்து, கழித்துப் பார்த்தால் மிஞ்சுவது அன்பே.

தனது பணி வாழ்வில் நிபந்தனையில்லாமல் மனித குலத்தையே நேசித்தார் இயேசு. அன்பென்னும் பேருண்மையை மையமாக வைத்தே போதித்தார். கடவுளின் அன்பும், பிறர் அன்பும் ஒன்றோடொன்று இணைந்து பின்னிக் கிடக்கின்றன. பிறரன்பு இல்லாத இறையன்பு இல்லை.

கற்கால மனிதன் முதல் பொற்கால மனிதன் வரை அனைவரும் தேடுவது அன்பே. அன்பைக் கொடுப்பவனுக்கு நண்பர்கள் அதிகம் என்பார்கள். அன்புக்கு அச்சமில்லை. அதற்கு பகைவர் இல்லை. அன்பு காற்றைப்போல எங்கும் நிறைந்தது. மேட்டிலும், பள்ளத்திலும், கல்லிலும், முள்ளிலும், கொட்டும் மழையைப் போன்று உறவிலும், நண்பனிலும், பகைவனிலும் நறுமணம் வீசும்.

அன்பு ஒரு சங்கிலி, அது ஒரு தொடர்கதை போன்றது. இத்தகைய இறை அன்பையும் பிறரன்பையும் நமது உறவுகளில் நிறைவு செய்து வாழ திருவழிபாடு நம்மை அழைக்கின்றது.

கடந்த ஞாயிறு நற்செய்தியில் இயேசு பிறரை அன்பு செய்யுங்கள் என்று மூன்று முறை கூறுகிறார். ஒன்று, இது இயேசுவின் அன்புக் கட்டளை. இரண்டாவது, இயேசுவே அன்புக்கு வழிகாட்டி, முன்னோடி. மூன்றாவது, நாம் அனைவரும் அவரின் சாட்சிகளாய் இருக்கிறோம் என்பதாகும்.

அன்பு எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறார். இறைவன் எங்கு இருக்கின்றாரோ அங்கே மகிழ்ச்சி இருக்கின்றது. மகிழ்ச்சி எங்குள்ளதோ அங்கே அன்பு நிறைவாக்கப்படுகிறது.

இன்று ஒவ்வொரு மனித இதயமும் அன்புக்காக, பாசத்துக்காக, இதமான உறவுக்காக ஏங்குவது உண்மையே. தனிமரமாக வாழ்வதில் யாருக்கும் உடன்பாடு இல்லை. அன்பு செய்யும் உள்ளங்களே உறவுகளைத் தேடிச் செல்கின்றன. அன்புக்கு மகத்தான ஆற்றல் உண்டு.புதுமைகளையும், புரட்சிகளையும் உருவாக்கும் மாபெரும் சக்தி, இந்த ஆற்றலையும் சக்தியையும் பகிர்ந்துகொள்ளவே ஒவ்வொரு மனிதனும் அழைக்கப்படுகிறான்.

தாய் தன் பிள்ளையிடம் காட்டும் அளவில்லாத அன்பைப் போல, சிலுவையின் நேரம் நெருங்க நெருங்க இயேசுவின் உள்ளம் அன்பால் உருகியது. விவிலியத்தில் வேறு எங்கும் இப்படி அழைக்காத இயேசு அன்புக் குழந்தைகளே என்று அழைத்து புதிய கட்டளைகளையும் தருகிறார்.

ஆயிரமாயிரம் கட்டளைகள், சட்டதிட்டங்கள் இருந்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்த அன்பு இல்லையேல் எந்த மனிதனையும் கட்டுப்படுத்த முடியாது.

திருச்சட்டத்தின் நிறைவு அன்பே. அன்பைச் செயலாக்கம் பெறச் செய்ய வேண்டுமானால் தன்னைப்போல பிறரையும் நேசிக்க வேண்டும் என்ற வார்த்தைகள் நம்மில் உயிர் பெற வேண்டும்.

தனது குறைகள், நிறைகள், இல்லாமை, திறமைகள் இவைகளை அறிந்திருந்தால் மட்டுமே, அடுத்தவரின் இயலாமை, குறைகளை நம்மால் புரிந்து கொண்டு அன்பு செய்ய முடியும்.

அன்புக்கு இலக்கணம் வகுத்தவர் இயேசு. அன்பால் மனித குலத்தை ஒன்றுப்படுத்தத் தன்னையே சிலுவையில் அர்ப்பணித்தவர்.

காட்டிக் கொடுத்தவனையே தட்டிக் கொடுத்தது அவர் அன்பு.

மனதார மறுதலித்தவரையே மன்னித்து தலைவராக்கியது அன்பு.

விட்டுப் பிரிந்தவர்களோடு ஒட்டி உறவாடி உயிரூட்டியது அன்பு.

நம்ப மறுத்தவர்களையும் நம்பி நற்செய்தியின் தூதுவர்களாக்கியது அன்பு.


அழிக்கத் துடித்தவர்களையும் அரவணைத்து ஆக்கப் பணிக்கு அனுப்பியது அன்பு.

கல்லூரி சென்ற மாணவியைப் பின் தொடர்ந்த வாலிபன், நான் உன் மீது அளவில்லாத அன்பு வைத்துள்ளேன் என்றான். சந்தேகப்பட்ட அவள், என்னை விட அழகான ஒருத்தி பின்னால் வந்து கொண்டிருக்கிறாள். அவளை அன்பு செய் என்றாள். அவன் திரும்பிச் சென்றான். சற்று தூரத்தில் அருவருப்பான தோற்றத்தில் ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள். கோபப்பட்ட அவன், முதலில் பேசியவளின் முன்னே சென்று ஏன் என்னை ஏமாற்றினாய்? என்றான். அதற்கு அவள் நீ மட்டும் உண்மையா சொல்லி விட்டாய். உனக்கு என் மீது உண்மையான, எல்லையில்லாத அன்பு இருந்தால் இன்னொருத்திக்காக ஏன் காத்திருந்தாய் என்றாள். அவன் தலைகுனிந்து சென்றான்.

இன்றைய சமூகத்தில் நிலவும் பொறாமை, சுயநலம், ஆதிக்கப் போக்கு, மனத்தளர்வு இவைகளுக்கு மத்தியில் அன்பை பறைசாற்ற முடிகிறதா? குடும்பத்தில் அன்பு, அமைதி, சமாதானம் இல்லையென்றால், சமுதாயத்தில் நாம் இவைகளை எதிர்பார்க்க முடியாது.

அன்பு பெற்றோர்களின் கட்டுப்பாட்டை இழந்து திசைமாறி சென்றுகொண்டிருக்கும் பிள்ளைகள் எத்தனை பேர்? அன்புக்காக ஏங்கி ஏங்கி தற்கொலைக்குத் தள்ளப்படும் இளைஞர்கள் எத்தனை பேர்? அன்பு, பாசம் இல்லாத பெற்றோர்களை விட்டு விட்டு ஓடும் பிள்ளைகள் எத்தனை பேர்? உண்மை அன்புக்காக ஏங்கி நான்கு சுவருக்குள்ளே விரதத்தில் காலம் கடத்தும் உள்ளங்கள் எத்தனை எத்தனை?

இதற்கெல்லாம் ஒரே வழி இயேசு காட்டும் அன்பு வழி மட்டுமே. நான் உங்களிடம் அன்பு செலுத்தியதுபோல நீங்களும் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் (யோவா. 13:34).இயேசுவின் அன்பு மன்னித்து ஏற்றுக்கொள்ளும் அன்பு. பிறருடைய நலனில் அக்கறை கொள்ளும் அன்பு.



இந்த அன்பை முதலில் குடும்பத்தில் உள்ளவர்கள் உள்வாங்கி அதை மற்றவர்களிடம் முழுமையாக வெளிப்படுத்தும்போது அங்கு அன்பு சூழல் உருவாகிறது. அங்கு புதிய மண்ணகம் உதயமாகியது. இயேசுவின் இலட்சியக் கனவு நனவாகிறது.இயேசுவின் அன்பு கட்டளைகளைக் கடமைக்காகவும், கட்டாயத்தின பேரிலும் கடைப்பிடிக்காமல் அன்பில் நடமாடும் விளம்பரமாக, அன்புச்சீடர்களாக, அன்பின் சாட்சிகளாக வாழ முன்வருவோம்.

அருட்திரு முனைவர் அருள் ...

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

# நீர் மின் உற்பத்தி 60 வீதமாக அதிகரிப்பு

நாடு முழுவதும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக தாபிக்கப்பட்டு வரும் நிலையில் நாட்டின் பலபகுதிகளிலும் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி பதிவாகி வருகிறது. இந்த நிலையில் நீரேந்து பகுதிகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்துவருவதாக அறிய வருகிறது.மவுசாகெலே,காசல்ரீ,லக்‌ஷபான, மற்றும் சமனலவெல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மற்றும் மத்திய மலைநாட்டில் விக்டோரியா,ரந்தெனிகல, மற்றும் கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் நீர்மின்உற்பத்தி 60 வீதமாக அதிகரித்துள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நீர்மின்உற்பத்தி குறைந்த நிலையில் கூடுதல் நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டதோடு தற்பொழுது 3 மணி 20 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. நேற்று முன்தினமும் நேற்றும் மின்வெட்டு அமுல்படுத்தப்படாதது குறிப்பிடத்தக்கது. (பா)

# கொட்டாஞ்சேனையில் ஒருவர் தாக்கி கொலை

கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆமர் வீதி பிரதேசத்தில் உள்ள வீட்டுத் தொகுதி பூங்காவிற்கு அருகில் இரு நபர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது உயிரிழந்தவர் 42 வயதுடைய ஆமர் வீதி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடக பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## எனக்கு எதற்கு...

திருப்பி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரது முகநூல் பதிவில், இராணுவ முகாமில் இருந்து வீரர்கள், ஸ்ரீமகாவிஹார சாலையில் உள்ள எனது வீட்டிற்கு வந்து, 'எனது பாதுகாப்புக்காக' என்று கூறினர். சற்று முன்னோக்கி; வழக்கமான எம்.எஸ்.டி பொலிஸ் , மேலும் மூவர் வந்தனர். "நன்றி சகோதரர்களே, இல்லை" என்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டேன். 2005, 2009 வெள்ளை வான் நெருக்கடி, கடத்தல் மற்றும் படுகொலைகளின் போது நான் கொழும்பில் அதே வீட்டில் இருந்தேன். இனியென்ன, இப்படியே இருக்கும்வரை இருப்போம் என அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் நியமித்த 4 விசேட குழுக்களின்...

அதன் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார கையொப்பமிட்ட அறிக்கையில், பிரச்சினைகளுக்கான காரணங்கள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து, நியமிக்கப்பட்டுள்ள குழுக்களுடன் ஆலோசிக்கும் வகையில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களுடன் கூட்டமொன்றைக் கூட்டி ஏற்கனவே அதற்கான அறிக்கைகள் தொகுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்றும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விரிவான செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் சாதகத்தன்மையை மக்கள் விரைவில் அனுபவிப்பார்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்ற ஆசன...

மாற்றத்தின் பின்னர் முதன்முறையாக கூடும் நிலையில் ஆசன ஒதுக்கீட்டிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக படைக்கள சேவிதர் அலுவலகம் தெரிவித்தது.

இதற்கமைய ஆளும் தரப்பில் ஜனாதிபதியின் ஆசனத்திற்கு அருகில் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவிற்கு முன்வரிசையில் வேறொரு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது. இது தவிர புதி அமைச்சர்களுக்கும் முன்வரிசையில் ஆசன ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு அடுத்த வரிசைகளில் முன்னாள் அமைச்சர்களுக்கு ஆசனம் ஒதுக்கப்படுவதாக அறிய வருகிறது.

இதே வேளை சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்த பொதுஜனபெரமுன பின்வரிசை எம்பிகள் 10 பேரும் இன்று ஆளும் தரப்பில் அமர உள்ளதாகவும் அறிய வருகிறது.

எதிரணி ஆசன ஒதுக்கீட்டில் பெரிய அளவில் மாற்றம் செய்யப்படாத போதும் எதிரணி எம்.பிகள் அமைச்சுப் பதவிகளை ஏற்கும் பட்சத்தில் சிறிய மாற்றம் வரலாம் என அறிய வருகிறது.(பா)

## அரசிற்கு SJBயும் ஆதரவளிக்க...

அரசாங்கம் மேற்கொள்ளும் சிறந்த செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் எதிர்க்கட்சி தலைவரின் தலைமையில் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு ஐக்கிய மக்கள் சக்திக்கு உண்டு எனத் தெரிவித்துள்ள அந்த கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார அதற்கிணங்க அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதென தமது கட்சி ஏகமனதாக தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தமது கட்சியின் முக்கியஸ்தர்களுக்கிடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றதாகவும் அதன்போது தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கும் நாட்டிற்கு நன்மை பயக்கும் சிறந்த செயற்பாடுகளுக்கும் பூரண ஆதரவளிக்க இணக்கம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசாங்கத்தின் எந்தவொரு பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லையென்ற தீரமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை பணத்திற்கு வாங்குவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் அடிப்படை கொள்கைக்கு மாறாக பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்படுமானால் தமது கட்சி அரசாங்கத்திற்கு வழங்கும் ஒத்துழைப்பை நிபந்தனையின்றி விலக்கிக்கொள்ளும் என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் 125 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்




தலைமன்னார் விஷேட நிருபர்

நாட்டில் நிலவி வரும் இந்த கடினமான பொருளாதார சிக்கலில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் மிகவும் வறுமை கோட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் தெரிவு செய்யப்பட்ட 125 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சிங்கப்பூரில் உள்ள ஒரு நிறுவனத்தால் மன்னார் மாவட்டத்திலுள்ள 543 வது இராணுவ பிரிகேட் ஊடாக இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# பொதுமக்களிடம் பொலிஸார் விடுத்துள்ள கோரிக்கை

பொது மக்களிடம் பொலிஸார் முக்கிய கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

அதாவது, கடந்த 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலையில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் கொள்ளையடித்தவர்கள் மற்றும் சொத்துக்களை திருடியவர்கள் குறித்த தகவல்களை பெற்றுத்தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

தகவல் தெரிவிக்க விரும்புவோர் 1997 மற்றும் 119 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தெரியப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தகவல் வழங்குவோரின் இரகசியம் பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எரிபொருள் பெறுவதற்காக...

விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் அதற்காக மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்றைய தினம் டீசல் கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளதுடன் விரைவில் மேலும் 3 எரிபொருள் கப்பல்கள் நாட்டிற்கு வரவள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கவுள்ள மூன்று எரிபொருள் கப்பல்களே விரைவில் நாட்டுக்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## நடமாடும் பொலிஸ்...

இந்த அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சமூக ஊடகங்கள் மூலம் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடவும் மக்கள் தூண்டப்பட்டு வருவதாக புலனாய்வு பிரிவினர் ஏற்கனவே தெரிவித்துள்ளன.

எனவே, குறிப்பிட்ட இடங்களில் மக்கள் கூடுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் குறித்த சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். ஏதேனும் கலவர சூழ்நிலையை கட்டுப்படுத்த தேவைப்பட்டால் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான உத்தரவுகளையும் அவர் வழங்கியுள்ளார்.

## Gas விநியோகம் விரைவுபடுத்தப்படும்...

மூன்று நாட்களில் விநியோகம் செய்ய முடியும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன மருந்து, உணவு மற்றும் உரம் என்பன கொள்வனவு செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது ட்விட்டர் பதிவில் மேற்படி தகவலை நேற்று வெளியிட்டுள்ளார்.

சமையல் எரிவாயு சிலிண்டர்களுடன் இரண்டு கப்பல்கள் இந்த வாரத்திற்குள் நாட்டை வந்தடையும் என லிற்றோகேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில் ஒரு கப்பல் 3700 மெட்ரிக்தொன் சமையல் எரிவாயுவுடன் நேற்றைய தினம் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அடுத்த கப்பல் எதிர்வரும் 19ஆம் திகதி நாட்டிற்கு வரவுள்ளதாக தெரிவித்துள்ள அந்த நிறுவனம் சமையல் எரிவாயு கையிருப்பில் இல்லாத நிலையில் அதற்காக மக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அறிவுறுத்தியுள்ளது.(ஸ)

## அமைச்சரவையில் இடம்பெறாது...

பாராளுமன்ற குழுக்களுக்கும் தமது ஆதரவை வழங்குவதாக அந்த கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்தியுள்ள பேச்சுவார்த்தையின் பின்னர் அவர்கள் இந்த இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளனர். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு மேற்படி 10 கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்றைய தினம் பிரதமர் அலுவலகத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. எவ்வாறாயினும் இங்கு கருத்து தெரிவித்துள்ள அவர்கள் அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்பட்ட பத்து கட்சிகளும் ஏற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படும் சிறந்த வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பாராளுமன்றத்தில் 15 துறைசார் மேற்பார்வை குழுக்களை நியமிக்க பிரதமர் முடிவு செய்துள்ளதோடு அவற்றில் தலைமை பொறுப்புகளை ஏற்க தயார் என உதய கம்மம்பில எம்.பி தெரிவித்தார்.

அதேவேளை புதிய அரசாங்கத்தில் தற்போது நான்கு அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ள நிலையில் மேலும் 14 அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இம்முறை அமைச்சரவையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட 20 அமைச்சர்கள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## தமிழருக்கும் நிவாரணம்...

வரை தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய மதிப்பீடுகளோ, விசாரணைகளோ, நிவாரணங்களோ வழங்கப்பட்டதா? என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழி சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது அதனைத் தமிழர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிர்வினையாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபா சொத்துகளை அழித்ததுடன் பலநூறு தமிழர்களையும் கொன்று குவித்தது. ஆனால், இன்றுவரை இது தொடர்பான விசாரணைகளும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை.

1977ஆம் ஆண்டு மீண்டும் 1983ஆம் ஆண்டும் தமிழர்கள்மீது பாரிய ஒரு வன்முறைத்தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், திட்டமிட்ட வகையில் அவர்களது வீடுகளும், வியாபார நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டு தீயூட்டப்பட்டன.

இந்த வன்முறைகளிலிருந்து தமிழர்கள் தம்மைத் தற்காத்துக்கொள்ள தனிநாடு கோரி இலங்கைப் படையினருக்கு எதிராக நீண்ட ஆயுதப்போராட்டத்தை நடத்தினர். அன்றைய காலகட்டங்களில் வடக்கு கிழக்கில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டு, அவர்களின் குடும்பங்கள் ஏதுமற்றவர்களாக, எஞ்சியவர்களின் உயிரைக் கையில் பிடித்தபடி நிற்கதியாகி நடுத்தெருவுக்கு வந்தனர்.

இறுதியில், 2009இல் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதுடன், முள்ளிவாய்க்காலில் விவசாயிகளின் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்கள், கனரக வாகனங்கள், இயந்திரங்கள், மகிழூந்துகள், உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன கைவிடப்பட்டு மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் மீண்டு வந்தபொழுது அவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உடைமைகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்த நாடு ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்பதையும், பலமொழி, பலகலாசாரங்களையும் பண்பாடுகளையும் பின்பற்றுகின்ற மக்கள் இங்கு வாழ்கின்றனர் என்பதையும், அவர்களது உரிமைகள் மதிக்கப்பட்டு அனைவருக்கும் சம நீதி வழங்கப்படவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்ளாதவரை இந்த நாட்டில் பொருளாதார எழுச்சியும் வராது. இந்த நாட்டிற்கு விமோசனமும் ஏற்படாது என்று தெரிவித்துள்ளார்.

## திறந்த சந்தைகளில்...

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னரான முதலாவது அமைச்சரவை நேற்று இடம் பெற்றது.

நேற்றைய கூட்டத்தில் பிரதமர் முன்வைத்த இந்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசலை பகிர்ந்தளிக்கு நடவடிக்கை இன்று முற்பகல் முதல் மீள ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதாக எமது செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

## தங்கத்தின் விலையில்...

அதேசயம், இலங்கையில் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 185,850 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 170,400 ரூபாவாக பதிவாகியுள்ளது.

## மே 20 இல் விடுமுறை...

செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டை மற்றும் பரீட்சை நிலையங்களுக்கு வினாத்தாள்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு தற்போது முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் இல்லை எனில்...

பட்சத்தில் பஸ் சேவைகளை முற்றாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் வழமையாக இயங்கும் என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

## மஹிந்த வீட்டு நாய்...

உறுப்பினரின் மகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி இரவு போராட்டக்காரர்களால் வீடு தாக்கி சேதப்படுத்தப்பட்ட போது, வீட்டின் பின்பகுதியில் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பல நாய்க்குட்டிகள் காணாமல் போயிருந்தன.

வீரகெட்டிய பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இருவர் பிரதமரின் அமைச்சரவையில்?...

ஏஎவ்பி செய்தி வெளியிட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிகளிற்கு தீர்வை காண்பதற்கான நியாயபூர்வமான முயற்சிகளை கட்சி தடுக்காது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார் எனவும் ஏஎவ்பி செய்தி வெளியிட்டுள்ளது.

## முக்கிய பிரமுகர்களது வீடுகளுக்கு...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களாக இடம்பெற்ற கலவரம் தொடர்பில் இதுவரை 398 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி முதல் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவர்களில் 159 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக நிஹால் தல்துவ மேலும் தெரிவித்தார்.

## அரசு மேற்கொள்ளும்...

(03 ஆம் பக்கத் தொடர்)

ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த கூட்டத்தின் போது புதிய அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குவது எனவும் எனினும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## சீன தம்பதிகள் பயணம்...

(03 ஆ ம் பக்கத் தொடர்)

சம்பவம் இடம்பெற்ற போது, பாலாவி பகுதியிலிருந்து கற்பிட்டி பகுதியை நோக்கி சீனர்கள் பயணித்த சொகுசு கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த வேகத்தை குறித்துக் காட்டும் இரும்புக் கம்பி ஒன்றின் மீது மோதியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், விபத்துக்குள்ளான கார் வீதியில் கவிழ்ந்து சுமார் 50 மீற்றர் வரை இழுத்துச் சொல்லப்பட்டு, வீதியோரத்தில் உள்ள தொலைபேசி தூண் ஒன்றின் மீதும் மோதி கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்நவர்வர்கள் உடனடியாக அந்த சொகுசு காரில் பயணம் செய்த பெண் உட்பட இருவரையும் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், குறித்த வாகனத்தை செலுத்தி சென்ற சீனரான 45 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், காயமடைந்த சீன நாட்டு பெண் தொடர்ந்தும் கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தில் உயிரிழந்த நபரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் கூறினர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எரிபொருள் விநியோகம்...

(03 ஆம் பக்கத் தொடர்)

அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இதுவரையில் 4 இலட்சம் மெட்ரிக் டன் எரிபொருள் இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தமது டுவிட்டர் கணக்கில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எரிபொருள் கிடைக்கப் பெறாமை காரணமாக, நேற்று நாடளாவிய ரீதியில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## இடியுடன் கூடிய மழை...

(03 ஆ ம் பக்கத் தொடர்)

சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.வடக்கு மாகாணத்திலும் அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளதேவையானமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காங்கேசந்துறையிலிருந்து புத்தளம், காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்த கடற்பரப்புகளில் கடல் அலைகள் 20 – 25 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எனவே கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதோடு சிலபகுதிகளில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

## புதிய அரசை ஆதரிக்க...

(03 ஆம் பக்கத் தொடர்)

ஈடுப்பட்டவர்களை தாக்க திட்டமிட்ட அனைவரையும் அவர்களுடைய தனிப்பட்ட தகுதி தராதரம் பார்க்காது கைது செய்து சட்டத்தின் முன் கொண்டு செல்ல வேண்டும்.பெருந்தோட்ட மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உடனடியாக விசேட வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

காலி முகத்திடல் போராட்டகாரர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வேண்டும். இலங்கை சட்டதரணி சங்கத்தின் பரிந்துரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஜனாதிபதி முறைமையை ஒழிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலிஸாரை தாக்கியவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவதும் ஆனால் அகிம்சை போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தாக்கியவர்கள் இன்னும் சுதந்திரமாகவும், வெளியில் உலா வருவதும் ஒரு சட்டம் ஒரு நாடு கேள்விக்குறியாக்கியுள்ளது.

# நகர்வலம்



## வெலிகம பலான பகுதியில் சூட்டுச் சம்பவம்; இருவர் காயம்

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலி கம, பலான பகுதியில் இடம்பெற்ற வெடிச்சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் (14) தெரிவித்தனர்.

பலான பகுதியைச் சேர்ந்த 40, 43 வயது மதிக்கத்தக்க இருவரே இவ்வாறு சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். எனினும் இருவரதும் நிலை பாரதூரமானதாகயில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

பலான பகுதியில் இடம்பெற்ற வைபவமொன்றின்போதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறிப்பிட்ட நபர்களுக்கு வெடிவைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர். சூட்டுச் சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக மாத்தறை வலய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிஷாந்த டி சொய்ஸாவின் பணிப்புரையின் பேரில் வெலிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். அபேசேகர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

## அநுராதபுரம் மாவட்டத்தில்
# எம்.பிகளின் வீடுகளை தாக்கிய பிக்கு உட்பட 22 பேருக்கு விளக்கமறியல்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர்கள் மற்றும் அநுராதபுரம் நகராதிபதி உள்ளிட்ட மாநகர சபை உறுப்பினர்களினதும் இல்லங்களுக்கு தீயிட்டு உடமைகளுக்கு சேதம் விளைவித்த சம்பவத்துடன் தொடர்புடைய 22 சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (15) காலை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் மிகுதுபுர, தஹிய்யாகம, மாத்தளை சந்தி, நொச்சியாகம, தம்புத்தேகம மற்றும் கல்கிரியாகம பகுதியைச் சேர்ந்த 20 - 53 வயதுடைய நபர்களே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களினுள் அநுராதபுரம் குருந்தங்குளம் பகுதியில் அமைந்துள்ள விஹாரை ஒன்றின் தேரர் ஒருவரும் அநுராதபுரம் புதிய நகர பகுதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரும் அடங்குவதாக பொலிசார் தெரிவித்தனர்.



மேற்படி நகரில் கலவரத்தில் ஈடுபட்ட குழுவினர் கடந்த 09 இரவு தொடக்கம் மறுநாள் காலை வரை முன்னாள் அமைச்சர்களான செஹான் சேமசிங்க, சன்ன ஜயசுமன, எஸ்.எம்.சந்திரசேன, துமிந்த திஸாநாயக்க, நகராதிபதி எச்.பீ. சோமதாச மற்றும் மாநகர சபை உறுப்பினர்களினதும் இல்லங்களுக்கு தீயிட்டு தாக்கி உடமைகளுக்கு சேதம் விளைவித்ததன் சந்தேகத்தின் பேரில் இவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## புத்தளம்; புளிச்சாக்குளம் நகரில் இன நல்லிணக்க தன்சல்



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புளிச்சாக்குளம் புதுக்குடியிருப்பு முஹைதீன் ஜும்ஆப் மஸ்ஜித் நிர்வாகமும் ஊர் மக்களும் இணைந்து வெசாக் தினத்தை முன்னிட்டு கோப்பி தன்சல் வழங்கி வைத்தனர். இனங்களுக்கிடையில் ஒற்றுமையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி (15) மாலை புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் புளிச்சாக்குளம் நகரில் கோப்பி வழங்கும் தன்சல் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் சர்வ மதத் தலைவர்களும் கலந்து கொண்டு நல்லிணக்கம் தொடர்பாக உரையாற்றினர்.

இதன்போது முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்பின்னர் வீதியில் பயணம் செய்த வாகன சாரதிகள், பொதுமக்களுக்கும் கோப்பி , பழங்கள் மற்றும் பலகாரங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சவுதி அரேபியாவின் தலைநகரிலுள்ள உலக இஸ்லாமி ராபிதா அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் முதன் முறையாக கலந்து கொண்ட இலங்கை மஹாபோதி சங்க தலைவர் பானகல உபதிஸ்ஸ தேரரினால் ராபிதா செயலாளர் டொக்டர் முஹம்மது பின் அப்துல் கரீம்அல் ஈஸாவுக்கு நினைவுச்சின்னம் வழங்குவதை காணலாம்.

## நீர்கொழும்பு மாநகர சபை;
# வீதிகளில் சேருகின்ற கழிவுகள் அகற்றப்படாமையால் துர்நாற்றம்

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

ஊரடங்குச் சட்டம் காரணமாக நீர்கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பிரிவினர் நீர்கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் சேருகின்ற திண்மக் கழிவுகளை அகற்றுவதில் உரிய கவனம் செலுத்துவதில்லை என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நீர்கொழும்பு லாஸரஸ் வீதியில் சேருகின்ற திண்மக் கழிவுகள் அகற்றப்படாமல் மிக நீண்ட நாட்களாக அசிங்கமான காணப்படுகின்றன. இதனால் ஏற்படுகின்ற துர்நாற்றம் குறித்த வீதியின் இரு மருங்குகளிலுள்ள குடும்பங்கள் பாரிய சுகாதார சீர்கேடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் . இது தொடர்பாக நீர்கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பராமரிப்பு அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் பிரதேசவாசிகள் வேண்டிக் கொள்கின்றனர் .

# தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அ.இ. கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியம் நன்றி



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி கொண்டிருக்கின்ற எமது இலங்கை திருநாட்டில் மக்கள் படும் அவஸ்தைகளை கவனத்தில் கொண்டு இன, மத, ஜாதி, பேதங்கள் பாராது உதவிகளை வழங்கி இருக்கின்ற தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு கிறிஸ்தவ மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவருமான அதிவண/ பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த பல மாதங்களாக எமது இலங்கைத் திருநாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக சமையல் எரிவாயுப் பிரச்சினை, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்ப் பிரச்சினை, பொருட்கள் மீதான விலைவாசி உயர்வு உட்பட பல இன்னல்களை எமது நாட்டின் அனைத்து இன மக்களும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையை சாதாரண நிலைக்கு கொண்டு வர முடியாது, மக்களின் சுமையை குறைக்க முடியாது இலங்கை அரசாங்கம் கூட திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் மனிதாபிமான அடிப்படையில் தானாக முன்வந்து மக்களுடைய குறைகளில் பங்கெடுத்து அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக முடியுமான உதவிகளை செய்வதற்காக தமிழகத்திலிருந்து அத்தியாவசிப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை எமது நாட்டுக்காக வழங்கியிருக்கின்றீர்கள். அது மட்டுமல்லாது, உங்கள் கட்சி சார்ந்த ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினரும் தனது ஒரு மாத சம்பளத்தை வழங்கும் படியும் அது மட்டுமன்றி, எதிர்க்கட்சியில் இருந்தும் எதிர்க்கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களும் தமது ஒரு மாத சம்பளத்தை வழங்கமுன் வந்திருப்பதும் மிகுந்த மகிழ்ச்சியை தரும் அதேவேளை, அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம் என தெரிவித்துள்ளார்.

## ஐந்து அம்புலன்ஸ் வண்டிகள் அன்பளிப்பு

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் பதவிய, கஹட்டகஸ்திகிலிய, கெக்கிராவ, தம்புத்தேகம, நொச்சியாகம ஆகிய ஐந்து வைத்தியசாலைகளுக்கும் ஐந்து நவீன அம்புலன்ஸ் வண்டிகள் அண்மையில் வடமத்திய மாகாண சுகாதார சேவை திணைக்களத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. ஜப்பான் உதவி திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 50 அம்புலன்ஸ் வண்டிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனை வடமத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சிசிர சிறிபத்தன, பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் சிந்தக விஜேவர்தன ஆகியோர் உரிய வைத்தியசாலைகளுக்கு வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்

119




**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

WP NA - 0491 Ashok Leyland Viking 2005, WP HL-9571 Ashok Leyland Viking, 2003, bus. கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0714542958. 030643



**மோட்டார் வாகனங்கள்**


106



**கார்கள் விற்பனைக்கு**

